விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 19 வியாழக்கிழமை (03.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 015

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்சினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை.
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4904)

2009-ம் ஆண்டு யுத்தத்துக்கு பின்னர்

## நல்லிணக்கத்தை ஏற்படுத்த மகிந்த தவறிவிட்டார்!

கூட்டமைப்புடனான சந்திப்பில் ஐரோப்பிய எம்.பி ஜெப்ரி

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மகிந்த ராஜபக்ஷ போதிய முயற்சிகளை மேற்கொள்ளாமையினையிட்டு தாம் கவலையடைவதாக ஜெப்ரி வான் ஓர்டன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள 23☛

உளவாளி நாமல்குமார

## இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்- சீ.ஐ.டி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பான தகவல்களை வெளியிட்டவரான பொலிஸ் உளவாளி நாமல் குமார 23☛

## மோட்டார் சைக்கிள் மோதி முதியவர் பலி

யாழ். ஆறுகால்மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஆறுகால் மடத்தடிப் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ஆறுகால்மடம் புதுவீதியைச் சேர்ந்த திரவியம் விஜயராசா (வயது -65) என்பவரே உயிரிழந்தார்.

முதியவர் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடப் பகுதியில் சிறு வியாபார நிலையம் ஒன்றினை நடத்தி வந்துள்ளார். நேற்று புதன்கிழமை காலையும் வழமை 23☛

பெப்ரவரி 04-ம் திகதிக்கு முன்னர்

# புதிய அரசியலமைப்பு வரைபு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## ஐரோப்பிய எம்.பியிடம் த.தே. கூட்டமைப்பு எடுத்துரைப்பு

(கொழும்பு) புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் நிபுணர்கள் குழுவால் தயாரிக்கப்பட்ட வரைபு எதிர்வரும் பெப்ரவரி 04-ம் திகதிக்கு முன்னதாக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரிடம் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (23-ம் பக்கம் பார்க்க...)



புதிய அரசியலமைப்புக்கான

## முயற்சிகள் தொடரும்

- சித்தார்த்தன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நிலையில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கும் சூழ்நிலை இல்லாவிட்டாலும் அதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற 24☛

2019-ம் ஆண்டுக்கான பாதீடு

## மார்ச் 05இல் சமர்ப்பிக்கப்படும்

அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இவ்வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தை எதிர்வரும் மார்ச் மாதம் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்க அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான கணக்கு அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள அமைச்ச 23☛

## அரசியல் பழிவாங்கலில் நான் ஈடுபடவில்லை

2019-ம் ஆண்டுக்கான முதலாவது அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையில் நான் ஈடுபடவில்லை. இனிமேல் ஈடுபடப்போவதுமில்லை. என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டுக்கான புதிய அரசின் முதலாவது அமைச்சரவை கூட்டம் நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத் 23☛



நாட்டை துண்டாடுவதாக இனவாதத்தை தூண்டி

## புதிய அரசியலமைப்பு குறித்து சிலர் அச்சமூட்ட முயல்கின்றனர்

மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டைத் துண்டாடுவதற்கும், இனவாதத்துக்கும் எதிராகவே மக்கள் விடுதலை முன்னணி எப்போதும் செயற்படும் என அக்கட்சியின் தலைவர் அனுர குமாரதிஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

உண்மையை மூடி மறைத்து புதிய அரசியலமைப்பு தொடர்பில் மக்களை அச்சமூட்டும் அறிவிப்புக்களை முன்வைக்க'ஒரு 23☛

## அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரியில் இன்று முதல் குறைகளை பதிகம் என்ற வாசகர் பகுதி வெளிவருகிறது. நீங்களும் உங்கள் பிரதேசத்தில் உள்ள குறைபாடு களை பதிக அமைப்பில் எழுதி புகைப்படத்துடன் அனுப்பி வைத்தால் அவை பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)

## முல்லைத்தீவு சாலை வழமை போன்று இயங்கும்

(முல்லைத்தீவு)

வட பிராந்திய போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு சாலை நாளை 4-ம் திகதி வழமை போன்று போக்குவரத்து சேவையில் ஈடுபடும் என முல்லைத்தீவு சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

நாளை 4-ம் திகதி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக வட பிராந்திய இணைந்த 24☛

## புதிய அரசமைப்பின் ஊடான நியாயமான அதிகார பகிர்வுக்கு

பெரும்பான்மையான புலம்பெயர் சமூகத்தினர் ஆதரவளிப்பர் சுமந்திரன் எம்.பி நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் புதிய அரசமைப்பின் ஊடாக நியாயமான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால் அதற்குப் பெரும்பான்மையான புலம்பெயர் சமூகத்தினர் தமது ஆதரவை வழங்குவார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் இலங்கை நட்புக் குழுவின் உறுப்பினருமான ஜெப்ரி வான் ஓர்டன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சட்டத்திற்கு முரணான மதுபானசாலை மணற்குடியிருப்பில் நிரந்தரமாக மூடல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டத்திற்குமுரணான வகையில் மணற்குடியிருப்பு மதுபானசாலை இயங்கிவருவதாக அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளியிட்டு வந்த நிலையில் குறித்த மதுபானசாலை ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளதுஎன்றுமுன்னாள் வடக்குமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். குறித்த மதுபானசாலை முற்றுமுழுதாக சட்டத்திற்கு முரணானவகையிலேயே இயங்கிக் கொண்டிருந்தது.

இம் மதுபானசாலை தொடர்பில் ஆராய குழு ஒன்றும்அமைக்கப்பட்டது.

இவ்வாறுஅமைக்கப்பட்ட குழுவின் அறிக்கைகளின்படி இம் மதுபானசாலை சட்டத்திற்கு முரணாக இயங்குவதாகவே குறிப்பிடப்பட்டது. அந்தவகையில் 22.10. 2018 அன்று இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மணற்குடியிருப்பில் சட்டத்திற்கு முரணான வகையில் அமைந்துள்ள இம் மதுபான சாலை அகற்றப்பட வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வந்த நிலையில், மதுவரித்திணைக்களத்தினர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2018.10.31 ஆம்திகதியுடன் அனுமதியை இரத்துச் செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில் மாவட்டச் செயலரிடம் இதுகுறித்து கேள்வி எழுப்பிய போது, 2019ஆம் ஆண்டு ஜனவரி முதல் குறித்த மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாதென தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக கரைதுறைப்பற்று உதவி பிரதேச செயலர் இ.பிரதாபனினால் நேற்று முன்தினம் மதுபான சாலை மூடப்பட்டது என செய்தி உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் சட்டத்திற்கு முரணான வகையில் இயங்கிய மதுபானசாலை அகற்றப்பட்டு, அப்பகுதி மக்களின் இடர்பாடுகளுக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது. (2-315)

# மரண அறிவித்தல்கள்

## கிருஸ்ணன் செல்வக்குமார் (சிவலிங்கம்)

தோற்றம் : 04.02.1960 மறைவு : 02.01.2019



சுழிபுரம் மத்தி சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணன் செல்வக்குமார் நேற்று (02.01.2019) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணன் - பூபதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், வசந்தகுமாரி (பிள்ளை) யின் அன்புக் கணவரும், தர்சனா, கோகுலன், உசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஆனந்தகுமார் (தங்கப்பழம்), கணேசகுமார் மற்றும் சிவகுமார் (ஜேர்மன்) கமலகுமாரி (குமாரி-சுவிஸ்), வசந்தகுமாரி (வசந்தி - சுவிஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் இலட்சுமி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், நடராசா, காலஞ்சென்றவர்களான செல்வராசா (சின்னையா), சாந்தகுமாரி மற்றும் துரைராசா (ராசன்), ஜெயராசா (ரவி), இராசகுமார் (குமார் - சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (04.01.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக உரும்பிராய் வடக்கு இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (6894)

மடத்தடி உரும்பிராய் வடக்கு 077 543 2559 தகவல் : குடும்பத்தினர்

## திருமதி அம்பிகாபதிக் குருக்கள் வள்ளியம்மா



பிறப்பு : 1939.04.07 இறப்பு : 2019.01.01

திக்கத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பிகாபதிக் குருக்கள் வள்ளியம்மா அவர்கள் 01.01.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெருமாள்சாமிக்குருக்கள் - செல்லம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற அம்பிகாபதிக்குருக்களின் அன்பு மனைவியும், செல்வராசக்குருக்கள், அம்பிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தினி, பிரபாகரக்குருக்கள் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற நடராசக்குருக்களின் பாசமிகு சகோதரியும், லாவன்யசர்மாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் திக்கம் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துலாப்பிள்ளையார் கோவிலடி,
அல்வாய் வட மேற்கு,
அல்வாய்.

தகவல் : குடும்பத்தினர்
021 226 1787 / 077 622 1046

(C-4997)


பொருளியற் கல்லூரி BARATHY

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி சுன்னாகம். | சித்தன்கேணி

(மூன்று இடங்களிலும்)

A/L 2021
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஜனவரி 6 காலை 8.00 மணி ஞாயிறு

A/L Day Clas
ஜனவரி 7 (திங்கள்)
காலை 7.00 மணி

(C-4992)


# மரண அறிவித்தல்

## திருமதி விநாயகதாசன் மஞ்சுளா

(தாதிய உத்தியோகஸ்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)



காரைநகரை வசிப்பிடமாகவும் பாரதிவீதி, கோண்டாவில் மேற்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விநாயகதாசன் மஞ்சுளா (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை) 02.01.2019 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தேவராசா-தயாநிதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ் சென்ற் பொன்னையா - இராசாந்தி தம்பதிகளின் மருமகளும், விநாயகதாசனின் (தங்கம்) அன்பு மனைவியும் லிபர்ணன் (யா/இந்துக்கல்லூரி), வர்ஷிகா (யாழ்/வேம்படி ம.உ.பா), அவர்களின் பாசமிகு தாயாரும், புலேந்திரகுமார் (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), தர்சினி சச்சிதானந்தசிவம் (கிளி / புனித திரேசா பெண்கள் கல்லூரி), தயாரஞ்சினி சந்திரகுமார் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (6888)

தகவல் :
பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு. கணவர் : விநாயகதாசன் (தங்கம்) 077 871 1050




யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக 150 ஸ்டோல்கள் ஒரே நேரத்தில்

## வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்

# 4 நாட்களுக்கு மட்டும்

## 2019 ஜனவரி 3ம், 4ம், 5ம், 6ம் திகதிகளில்

(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

நேரம்: மு.ப. 10.00 – பி.ப. 8.00 வரை (பகலுணவு நேர இடைவெளி இல்லை)

இறக்குமதி செய்யப்பட்ட எக்ஸ்குலுசிவ் டிசைனர்

# ஜுவல்லரி விற்பனைத் திருவிழா – 2019

கோல்ட் கவரிங், ஹைதரபாத் பேர்ல்ஸ், ஜெய்பூர் குண்டன், கிறிஸ்டல், அமெரிக்கன் டயமன்ட், கொரியன் ஸ்டோன் ஜுவல்லரிகளை இலங்கை பெண்களும் வாங்கலாம்.

## ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே

உண்மையான ஏற்றுமதி பெறுமதி 1500/– முதல் 3000/– ஐ கொண்ட ஜுவல்லரிகளை நாம் உங்களுக்கு தருவது

## ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே

**இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாத படியால் சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**

| | | | |
|---|---|---|---|
| ▸▸ கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ கோல்ட் கவரிங் செயின் ....... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ கோல்ட் கவரிங் செயின் பென்டட் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ அவுஸ்திரேலியன் டயமன்ட் நெக்லஸ் செட்... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ அவுஸ்திரேலியன் டயமன்ட் பிங்கரிங் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ கோல்ட் பிளேடட் வலயல் செட் ....... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ வெஸ்டன் ஸ்டைல் இயரிங் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ கோல்ட் பிளேடட் செயின் ....... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ அமெரிக்கன் டயமன்ட் இயரிங் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ சில்வர் பிளேடட் கொலுசு ....... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ அவுஸ்திரேலியன் டயமன்ட் பிரேஸ்லட்.... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ கொரியன் ஸ்டோன் சாரி பின் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ கோல்ட் கவரிங் பெண்கள் & ஆண்களுக்குரிய பிரேஸ்லட்... | ரூ.400/- மட்டுமே |

**விசேட சலுகை : திருமணம் மற்றும் பார்டிகளுக்கான விசேட ஜுவல்லரிகள் ரூ. 600/- முதல் ரூ. 8,000/- வரையான விலைகளில் உள்ளன.**

**இடம் : வீரசிங்கம் மண்டபம், 10/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-4985)

அனுமதி இலவசம் மொபைல் : 076 5886866

## If you want to be a qualified Pharmacist ?

தற்போது வடபகுதியில் ஏன் ? முழு இலங்கையிலும் மருந்தாளர்கள் பதவிக்கு பல வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. நாளாந்தம் பத்திரிகையில் "மருந்தாளர்கள் தேவை" என்ற விளம்பரம் வந்துகொண்டே இருக்கிறது. இப்படியான நிலையில் மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சைக்கு பயிலுனர்களாக பதியும் நடைமுறையை இரத்து செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதாவது மிக விரைவில் Sri Lanka Medical Councilஇல் Apprentice Pharmacist indenture form registration system த்தை நிறுத்தவுள்ளார்கள். தற்போது மூன்று விஞ்ஞான பாடங்களில் ( இரசாயன பாடம் உட்பட ) சாதாரண சித்தியடைந்த A/L மாணவர்களுக்கும் ஏற்கனவே இந்த தகுதியுள்ள வயது வந்தவர்களுக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம் கூடியுள்ளது. தற்போது Apprentice Pharmacist ஆக பதிவு செய்தால் 2 வருடத்தின் பின்னர் பரீட்சை எடுக்கலாம். சித்தியடையாதுவிட்டால் மேலும் 4 தடவைகள் சோதனை எடுக்க லாம். அதனடிப்படையில் 2025 வரை External Pharmacist Exam நடாத்தப்பட வேண்டும். இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுள் ளோர் உடனடியாக SLMCஇல் Apprentice Pharmacist ஆக பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம். இதற்கு வயது எல்லை இல்லை.

பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளும் இடம்:
Nehru Sir, Pharmacist exam Co ordinator , Jaffna College
(Under Graduate Dept) 464, Hospital Road, Jaffna. T / P 0776256292



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**விற்பனைக்கு**

யாழ்.ரக்கா றோட், 1/1, ரக்கா லேனில் 3 பரப்பு காணியுடன் மேல் மாடி வீடு விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு:
**மணியம்**
0764734160





# மணிவிழா
## வாழ்த்து

**திரு.சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா**

(பிரதிக்கல்விப் பணிப்பாளர் - கல்வி நிர்வாகம் (யாழ்ப்பாண கல்வி வலயம்)

அவர்கள் வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்.
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

(C-4990)



# மணிவிழா
## வாழ்த்துக்கள்



யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் அதிபராகவும் கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவாகி கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் அதனைத் தொடர்ந்து பொது நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெற்று மணிவிழாக்காணும்

**உயர்திரு. சி.மாணிக்கராஜா அவர்கள்**

ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ, பெரும் மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர், அதிபர்கள்
கோப்பாய்க் கல்விக் கோட்டம்

(C-4989)



# மனதார
## வாழ்த்துகின்றோம்

வெள்ள அனர்த்தத்தின்போது இரவு பகல் பாராது எமது கிராம மக்களுக்காக சேவையாற்றிய சேவையாளர்களை மனதார வாழ்த்துகின்றோம். சேவையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்



கண்டாவளை பிரதேச செயலர்
**த.பிருந்தாகரன்**



பெரியகுளம் கிராம அலுவலர் (KN/52)
**கேதீஸ்வரன் விஜயநிர்மலா**



பெரியகுளம் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
**கந்தசாமி சுரேகா**

வாழ்த்துவோர்:
KN/52 கிராமசேவகர் பிரிவு, பெரியகுளம் கிராம மக்கள்

(C-4993)



# பாராட்டுடன் கூடிய வாழ்த்துக்கள்

2018ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உ/த பரீட்சையில் எமது சக வர்த்தக நண்பர்களான



நெல்லியடி ஜெயசெந்தினி நகைமாட உரிமையாளர் ஜெயநாதன் அவர்களின் மகன்

**செல்வன் மிதுர்ஷன்**
யா/ஹாட்லிக் கல்லூரி

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 3A விசேட சித்திகளைப் பெற்றுள்ளதோடு மாவட்ட ரீதியில் 2ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 77ஆவது இடத்தையும்



நெல்லியடி திசா களஞ்சிய உரிமையாளர் இரவீந்திரன் அவர்களின் மகன்

**செல்வன் சாருசன்**
யா/ஹாட்லிக் கல்லூரி

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 3A விசேட சித்திகளைப் பெற்றுள்ளதோடு மாவட்ட ரீதியில் 8ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 174ஆம் இடத்தையும்

பெற்று சித்தியடைந்தமையை உள்ளம் உவகையுற வாழ்த்துவதோடு கல்வியில் மேலும் பல சிறப்புக்களைப் பெறவும் வாழ்த்துகின்றோம்.

மேலும் எமது பிரதேசத்தில் கணிதப் பிரிவில் மாவட்ட ரீதியில் 1ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 6ஆம் இடத்தையும் பெற்ற மாணவன் செல்வன் ச.சஞ்சித் அவர்களையும் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: நெல்லியடி வர்த்தக சங்கம்

# பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் சாதனை தொடர்கிறது....

2016/2017

# தேசிய உற்பத்தித்திறன் போட்டியில்

தேசிய மட்டத்தில்

# இரண்டாம் இடத்தைப் பெற்று




வடமாகாணத்திற்கும் யாழ்.மாவட்டத்திற்கும் பெருமையைத் தேடித் தந்த, வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

(6890)

பிரதேச வாழ் மக்கள், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.



யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்திலுள்ள மேல் நீதிமன்ற நீதிபதி. நீதிபதிகள் உட்பட உத்தியோகத்தர்கள். அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் உறுதியுரை எடுத்தனர். யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன். யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் அந்தோனிசாமி பீற்றர் போல் மற்றும் யாழ்ப்பாணம் தொழில் நியாய சபையின் தலைவர் வெள்ளத்தம்பி முகமட் சியான் ஆகியோர் பங்கேற்றனர். (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# தேசிய ரீதியில் இரண்டாமிடம்




(யாழ்ப்பாணம்)


தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் அரசதிணைக்களங்களுக்கிடையில் நடத்தப்பட்ட உற்பத்தித்திறன் விருது வழங்கும் போட்டித் தொடரில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது.

மிகவும் மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் செயற்பாடுகளினூடாக பொதுமக்களுக்கான சேவைகளை இப்பிரதேச செயலகம் வழங்கி வருகின்றது. உற்பத்தித்திறன் செயற்பாடுகள் இப்பிரதேச செயலகத்தில் முன்னெடுப்பதற்கு முன்னர் பொது மக்கள் தமது சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

தற்பொழுது அந்தக்குறைபாடுகள் சீர் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு சிறந்த சேவையினை வினைத்திறனுடன் வழங்கி வருகின்ற ஒரு சிறந்த பிரதேச செயலகமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்பர்சிட்டி கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தரப்படும்

## டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இன்பர்சிட்டி கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் கடல்வான் அகழ்வு தொடர்பிலான பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத்தர முயற்சி மேற் கொள்ளப்படும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை இன்பர்சிட்டி பகுதியில் இடம்பெற்ற கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ் மக்களுக்கு நிரந்தரமான பொருளாதார வசதிகளுடன் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையுடனேயே நாம் உழைத்து வருகின்றோம்.

அந்தவகையிலேயே கடந்த காலத்தில் நாம் ஆட்சி அதிகாரங்களில் இருந்த போது இப்பகுதியில் மட்டுமல்லாது குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து மக்களின் தேவைப்பாடுகளை நிறைவு செய்திருந்தோம்.

எமது இனத்திற்கான அபிலாஷைகளுக்கு நிரந்தரமான தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனாலும் அவற்றையெல்லாம் எமது மக்களை தலைமை வகித்த கடந்தகால தமிழ் தலைமைகளின் தவறுகளால் அனைத்தும் கானல் நீராகிவிட்டன. இதன் விளைவுகளே இன்றைய தமிழ் மக்களின் அவலங்களுக்கான காரணமாக இருக்கின்றது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வானாலும் சரி அபிவிருத்திக்கான தீர்வானாலும் சரி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கொள்கை நிலைப்பாட்டினூடாகவே பெற்றுக் கொள்ள முடியும் என்ற யதார்த்தத்தை இன்று அனைவரும் உணர்ந்துள்ளனர்.

தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் எம்மால் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது. ஆனாலும் அதற்கான அரசியல் அதிகாரங்கள் இதுவரை எமக்கு முழுமையாக கிடைக்கப்பெறவில்லை.

எனவே இனிவரும் காலங்களில் தமிழ் மக்கள் தமது எதிர்கால வாழ்வியல் நிலை தொடர்பில் சிந்தித்து விழிப்படைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்பதுடன் இந்த இன்பர்சிட்டி பகுதி கடற்றொழிலாளர்களது வான் அகழ்வு பிரச்சினைக்கும் நிச்சயமாக தீர்வைப் பெற்றுத்தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச நிர்வாக செயலாளர் விசிந்தன் மற்றும் கட்சியின் குறித்த பிரதேச சபையின் உறுப்பினர் சாந்தாதேவி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# த.தே.கூ. ஆட்சியமைக்க ஆதரவு கோரவில்லை

## தவிசாளர் வாமதேவன் விளக்கம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆட்சியமைக்க ஈழமக்கள் ஜனநாயக் கட்சியினர் மற்றும் சுதந்திரக் கட்சியினர் தாமாக வந்து ஆதரவு தெரிவித்தார்களே தவிர நாம் அவர்களை ஆதரவு கோரவுமில்லை. அவர்களோடு ஒட்டவுமில்லை என சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார். வரவு-செலவுத் திட்டத்திற்கு ஐந்து உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தமை தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் ஊடகவியலாளர்களைச் சந்தித்து பேசும் போது ஊடகவியலாளர் ஒருவர் "நீங்கள் ஆட்சியமைக்க ஈ.பி.டி.பி. மற்றும் சுதந்திரக் கட்சியினரின் உதவியை நாடினீர்கள். ஆனால் தற்போது அவர்களே வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்பது சரியா?" என கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் சாவகச்சேரி பிரதேச சபையில் ஆட்சியமைக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இருவரையும் சுயேட்சைக் குழுவில் ஒருவரையும் மாத்திரமே ஆதரவு கோரினோம். ஈ.பி.டி.பி.மற்றும் சுதந்திரக் கட்சியினரை நாம் ஒருபோதும் ஆதரவு வழங்குமாறு கோரவில்லை. அவர்கள் தாமாக வந்து ஒட்டியவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். சாவகச்சேரி பிரதேச சபையில் வரவு-செலவுத் திட்டத்திற்கு சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் மூவர் மற்றும் ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த இருவருமாக மொத்தம் ஐந்து உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(இ-30)

## மீன் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

2018 ஆம் ஆண்டு 2 ஆம் பருவகால மீள் பரீட்சைக்கான (2nd semester - 2018-Repeat Exam) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பங்களை 05.01.2019 தொடக்கம் பெற்று சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 20.01. 2019 ஆகும். எனவே அதற்கு முன் விண்ணப்பங்களை நிறுவனத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து நிர்வாகப் பகுதியில் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு உதவிப் பதிவாளரை தொடர்பு கொள்ளவும் என யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன உதவிப் பதிவாளர் வை.திசாந்தன் அறிவித்துள்ளார். (இ)

# பேருந்து தரிப்பிடத்திலிருந்து ஒரு கிலோ வெடிமருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறுவர் நீதிமன்றத்திற்கு அருகில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடத்திலிருந்து சி4 வெடிமருந்து ஒரு கிலோ மற்றும் 4 டெனேட்டர் என்பன விசேட அதிரடி படையினரால் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடி படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் தேடுதலை மேற்கொண்ட விசேட அதிரடிப்படையினர் பொதி செய்யப்பட்ட நிலையிலிருந்து ஒரு கிலோ நிறையுடைய சி4 வெடிமருந்தையும் டெனேட்டர் என அழைக்கப்படும் வெடி மருந்திற்குப் பயன்படுத்தப்படும் 4 குழாய்களையும் மீட்டனர்.

இந்த வெடிமருந்துகளை அப்பகுதியிலுள்ள மீனவர்கள் மீன்பிடிக்கக் கொண்டு செல்வதற்காக பேருந்து தரிப்பிடத்தில் வைத்திருக்கலாம் என்றும் விசேட அதிரடி படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன் மீட்கப்பட்ட வெடி பொருட்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவற்றை யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த மாதம் இவ்வாறு பேருந்து தரிப்பிடத்திலிருந்து ஒரு தொகை வெடி மருந்துகள் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-9-101)

# உலருணவுப் பொருட்கள் வழங்கல்



(கரணவாய்)

புது வருடத்தை முன்னிட்டு வறுமைக் கோட்டுக்குட்பட்ட 155 குடும்பங்களுக்கு யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகத்தால் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி தர்ஷன கெட்டியாராச்சி நேற்று முன்தினம் நேரடியாக அப் பகுதிகளுக்குச் சென்று பொருட்களை வழங்கினார்.

கரவெட்டி பகுதியிலுள்ள இராஜகிராமத்தைச் சேர்ந்த 55 குடும்பங்களுக்கு மாலை சந்தியிலுள்ள கட்டடத்திலும் பருத்தித்துறை பகுதியிலுள்ள புனிதநகரைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு அங்குள்ள சனசமூக நிலையத்திலும் மருதங்கேணிப் பகுதியிலுள்ள 50 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அங்குள்ள பாடசாலை ஒன்றில் வைத்தும் இவ் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.(இ-60)





வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப் பேரவை நடத்திய பண்பாட்டுப் பெருவிழா பருத்தித்துறையில் அமைந்துள்ள வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

# இனவாத நடவடிக்கைக்கு துணைபோக மாட்டோம்

## நீதியமைச்சர் தலதா உறுதி



(இரத்தினபுரி)

அரசியல் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் வகையில் ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானங்களை மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தொடர்ந்து செயற்படுவோம்.

அத்துடன் அரசியல் சதித்திட்டம் இடம்பெற்ற 56 நாட்களில் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிட முடியாது என நீதி மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

இரத்தினபுரி பெல்மதுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அரசியல் அதிகாரத்துக்கு வரமுடியாமல் போனவர்கள் நாட்டுக்குள் மீண்டும் இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

தேர்தல் காலம் வரும்போது சிங்கள, தமிழ், முஸ்லிம் என இவர்கள் செயற்பட ஆரம்பிப்பார்கள்.

அதிகாரம் கிடைக்காவிட்டாலும் நாங்கள் ஒருபோதும் நாட்டுக்குள் இனவாத நடவடிக்கைகளுக்கு துணை போக மாட்டோம். அதற்கு இடமளிக்கவும் மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# மரண அறிவித்தல்

## திரு.நடராஜா நகுலேந்திரராஜா (சிவம்)



யாழ்ப்பாணம் V.H.ஒழுங்கை இருபாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு., நடராஜா நகுலேந்திரராஜா அவர்கள் 31.12.2018 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா நடராஜா- நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் கௌசலாதேவி, கமலாதேவி, கருணாதேவி, யோகேந்திரராஜா, புவனேந்திரராஜா, பவானி மற்றும் காமினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயரங்கநாதன், ஜெயராஜா, பரராஜசிங்கம் (அமரர்), ரதிராணி, கமலராணி, ஸ்ரீஸ்கந்தராஜா, சுதாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜனரஞ்ஜனி-நந்தகுமார், தாட்ஷாயினி-திலீபன், கிருத்திகன், ஆதித்தன், வைஸ்ணவி, சகானா, சந்தியா, சாதனா ஆகியோரின் அன்பு மாமாவும் நிலா, சாம்பவி, சங்கவி, சாகித்தியன், சாத்வீகன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03.01.2019 இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.H.லேன்
இருபாலை, கோப்பாய்

தகவல்
குடும்பத்தினர்

(6878)

# பொது அறிவித்தல்-2019

## வேலணை பிரதேச சபை, வேலணை

01. படவரைஞர்களை பதிவு செய்தல்

2019 ஆம் ஆண்டு படவரைஞர்களாக விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்தோரும் 2019 ஆம் ஆண்டு பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும் அல்லது புதுப்பித்துக் கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

02. வியாபார உரிம, அனுமதிப்பத்திரம்

இப் பிரதேச சபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்கு பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய உப அலுவலகங்களில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப் பத்திரத்தை (Trade License) பெற்றுக் கொள்ளவும். 31.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாதவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

03.சூழல் பாதுகாப்பு உரிமம்

தொழில்/வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகங்களுக்கான உரிமம்

துவிச்சக்கரவண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2019 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

05. கட்டட அனுமதி வழங்கல்

1.தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள், அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்.

2.புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியை புதுப்பிக்க வேண்டும்.

3.அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.

4.சபை எல்லைக்குள் குழாய்க்கிணறு அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.

06. வீதி ஒழுங்கும், தெருவோர வியாபாரமும்

1.வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. வியாபார நிலையங்களுக்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடத்துமாறு வர்த்தக நிலைய உரிமையாளருக்கு அறியத்தருகின்றேன்.

2.சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, பழங்கள், தேங்காய், முட்டை என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.

07. விளம்பரங்கள் அமைத்தல்/ காட்சிப்படுத்தல்

பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியினைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்தல் வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும்.

08. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்

1.திண்மக் கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்க வேண்டும் என்பதுடன் திண்மக் கழிவுகள் பொது இடங்களில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்பட வேண்டும். அல்லாதவிடத்து பிரதேச சபைச் சட்ட ஏற்பாட்டிற்கு அமைவாக பிரதேச சபையால் தன்னுரித்தாக்கப்பட்டு துப்புரவு செய்யப்படும்.

09. பொதுச் சுகாதாரத்தை பேணுதல்

உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

10. ஒப்பந்தகாரரைப் பதிவு செய்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப் பொறியியல் வேலைகளை செய்து வழங்குவதற்கு தேசிய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவை வைத்திருக்கும் ஆர்வமுடைய மனுதாரர்கள் பதிவை மேற்கொள்ள முடியும்.

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி,
தவிசாளர், வேலணை பிரதேசசபை

(C-4975)

# இராசி பலன்

**மீனம்:** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் விலகும், திறமை மிக்கவர்களில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நண்பர்களிடையே சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**இடபம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, கௌரவமான நாள்.

**கும்பம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், நண்பர்கள் உங்களின் முயற்சிக்குப் பக்க பலமாக இருப்பார்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**மகரம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இறை வழிபட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள்.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பயணத்தால் பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டால் பெருமை கான வேண்டிய நாள், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், முன்னேற்றம் கூடும் நாள்.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்படுகளால் புகழ் பெறுவீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பு உயரும், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், கொள்கைப்பிடிப்புடன் செயற்படுவீர்கள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

கிரகநிலை

செவ் | ராகு | கேது | சூரி.புத. சனி | குரு.சந். சுக்

சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை

03.01.2019
மார்கழி 19, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 5.06 மணிவரை
அனுசம் பிற்பகல் 1.20 மணிவரை
சுபநேரம் 8.00-9.30 மணிவரை
இராகுகாலம் 2.30-3.30 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்



# க.பொ.த.(உ/த) வில் 3S பெற்ற எல்லோரும் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் (முதற்படிவம்- First Form) அனுப்புவதற்கு தகுதி பெற்றவர்களாவர்

01

### பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் முதற்படிவம் (First Form)நிரப்புதலும் கற்கைநெறிகளைத் தெரிவு செய்தலும்

மாணவ உலகின் உயர்வான குறிக்கோள் க.பொ.த. (உ.த) பரீட்சைகளில் சிறந்த சித்தியெய்திப் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை மேற்கொண்டு தகுதியான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளுதலாகும். ஒவ்வொரு மாணவரும் தெரிந்தோ அல்லது தெரியாமலோ இந்தக்குறிக்கோளை நோக்கியே பயணித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் அவரது திறமைக்கும் தகுதிக்கும் ஏற்பவே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றது. சிலர் தகுதியும் திறமையும் இருந்தும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்ற விண்ணப்பப்படிவமாகிய முதற்படிவத்தை (First Form) சரியாக நிரப்புவதில் தவறிவிடுவதால் அல்லது முதற்படிவத்தில் வினவப்பட்ட முறைமைகளை விளங்கிக் கொள்ளாமல் படிவத்தைப்பூர்த்தி செய்வதால் அல்லது தகுதியிருந்தும் முதற்படிவம் அனுப்பாது விடுவதனால் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறும் தகுதியை இழந்து விடுகின்றனர். இது மிக மிகக் கவலை தரும் விடயமாகும்.

### க.பொ.த.(உ.த) பரீட்சையின்பின் முதற்படிவம் அனுப்புவதற்கான தகுதிப்பாடும் விண்ணப்ப நடைமுறையும்

1) க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மூன்று தடவைகளுக்குள், ஒரே தடவையில் பிரதான மூன்று பாடங்களிலும் சாதாரண சித்தி (3S) பெற்றிருத்தல் வேண்டும்.

2) பொதுச்சாதாரணப் பரீட்சையில் 30% இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றிருத்தல்.

இவ்விரு தகுதிப்பாடுகளும் இருந்தால் முதற்படிவத்தை அனுப்ப முடியும். ஒருதடவையில் பொதுச்சாதாரணப்பரீட்சையில் 30% புள்ளிகள் கிடைக்கவில்லையாயினும் முதற்படிவம் அனுப்ப முடியும். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்ட மூன்று தடவைக்குள் பொதுச்சாதாரணப் பரீட்சையில் **30% புள்ளிகள் பெற்றுக் கொண்டால் பல்கலைக் கழகப் பதிவை மேற்கொள்ள முடியும்.**



இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்பயில் நெறிகளுக்கு அனுமதி கோரும் மாணவர்கள் இலத்திரனியல் விண்ணப்பத்தை www.ugc.ac.lk என்ற இணையத்தளத்தினூடாக அனுப்புதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இணையத்தள விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தபின் www.ugc.ac.lk என்ற இணையத்தள முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிய பின், பூர்த்தி செய்யப்பட்ட அவ்விண்ணப்பத்தை PDF ஆக கறுப்பு வெள்ளை லேசர் பிரிண்டரில் அச்சுப்பிரதி செய்து உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமிடப்பட வேண்டும்.

பின்னர் பாடசாலைப் பரீட்சார்த்தியாயின் க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபரினாலும் தனிப்பட்ட பரிட்சார்த்தியாயின் சமாதான நீதவான் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளரினாலும் உறுதிப்படுத்திக் கையொப்பம், பதவி முத்திரை என்பன இடப்படவேண்டும்.

அச்சிடப்பட்ட அவ்விண்ணப்பத்தோடு ஒரேமாதிரி இவ்விரண்டு பார்கோட்டுகள் (Readable Bar Codes) அடங்கிய ஒரு தாளும் அச்சிடப்பட்டிருக்கும். கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்ட அவ்விண்ணப்பத்தோடு இணைக்கப்படுகின்ற எல்லா ஆவணங்களிலும் பார்கோட்டுகள் பொருத்தமாக இருபக்கங்களிலும் வலதுபக்க மேல் மூலையில் ஒட்டப்படவேண்டும். இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் வருமாறு.

1.பாடசாலை விலகல் சான்றிதழின் மூலப்பிரதி.

2.மாணவர் பதிவு அறிக்கையின் மூலப்பிரதி.

3. பிரதேச செயலாளரினால் மேலொப்பமிட்டு உத்தியோக பூர்வ முத்திரையிடப்பட்ட கிராம சேவகரின் சான்றிதழ் மூலப் பிரதி.

4. க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேற்று மூலச்சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

5. பெயரில் வித்தியாசமிருப்பின் பெயரை உறுதி செய்யும் வகையிலான சத்தியக்கடதாசி (ரூ.50/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சமாதான நீதவான் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

(இவ் ஆவணங்கள் அனுப்ப வேண்டிய தேவையுடையவர்களே அனுப்ப வேண்டும். தேவைப்பாடு கருதியதாகவே Bar Codes அச்சிடப்பட்டிருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்).

### தனிப்பட்ட பரீட்சார்த்தியாயின் பின்வரும் ஆவணங்கள் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்

1.பாடசாலை விலகல் சான்றிதழின் மூலப்பிரதி/ மாணவர் பதிவு அறிக்கையின் மூலப்பிரதி.

2.பிரதேச செயலாளரினால் மேலொப்பமிட்டு உத்தியோக பூர்வ முத்திரையிடப்பட்ட கிராம சேவகரின் சான்றிதழ் மூலப் பிரதி. (போட்டோ பிரதி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) என்பவற்றில் பொருத்தமான/ தேவையான ஆவணங்களை இணைத்து Bar Codes ஒட்டி, A4 அளவுள்ள தபால் உறையில் இட்டு உரிய திகதிக்கு முன்னர் "சிரேஷ்ட உதவிச் செயலாளர் - பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20,வோட் பிளேஸ், கொழும்பு - 07" என்னும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

முதற்படிவத்தை நிரப்பும் போது மணவர்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கியமான விடயம், ஒருவர் தான் க.பொ.த. (உ/த) வில் கற்பதற்குத்தெரிவு செய்த பாடச்சேர்மானங்களுக்கு அமைவாக 125 பட்டக்கற்கை நெறிகளுக்கும் (UniCode) அந்தந்தக் கற்கைநெறிகளை வழங்கும் பல்கலைக்கழகங்களுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

ஆனால், பல மாணவர்கள் அறியாமை காரணமாகவும் அறிந்திருந்தும் வெளியிடங்களுக்குச் செல்வதால் கலாசாரப்பாதிப்பு ஏற்படும் என்ற குறுகிய மனப்பான்மையாலும் மற்றும் தாழ்வு மனப்பான்மை, பொருளாதார வறுமை காரணமாகவும் வெளி மாவட்டங்களுக்கு விண்ணப்பிக்கத் தவறி விடுவதால் பல்கலைக்கழக வாய்ப்பைப்பெற்று உயர்கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தைத் தவறவிடுகின்றமை மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

இத்தகைய எண்ணங்களிலிருந்து மாணவர்கள் விடுபட்டு வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகில் வெற்றி நடைபோட வேண்டும்.

கற்கை நெறிகள் ஒவ்வொன்றும் **"UniCode"** எனப்படும். **"UniCode"** என்றால் குறித்த பல்கலைக்கழகத்தின்/ வளாகத்தின்/ உயர்கல்வி நிறுவனங்களின் தனித்தனி வெவ்வேறு கற்கை நெறிகளைக் குறிக்கும்.

உ-ம் : **001A** - மருத்துவம் - கொழும்புப் பல்கலைக்கழகம்.

**001B** - மருத்துவம் - பேராதனைப் பல்கலைக்கழகம்.

இலங்கையிலுள்ள 14 தேசிய பல்கலைக்கழகங்களிலும் 03 வளாகங்களிலும் 05 நிறுவகங்களிலுமாக 22 உயர் கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 210 இற்கும் மேற்பட்ட (UniCode) பட்டக் கற்கை நெறிகளை வடிவமைத்துப் பட்டங்களை வழங்கி வருகின்றன.

### தேசிய பல்கலைக்கழகங்கள்-14 (மரபு சார்ந்த பல்கலைக்கழகம்)

1. கொழும்பு பல்கலைக்கழகம்.

2.பேராதனை பல்கலைக் கழகம்.

3.ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்.

4.களனி பல்கலைக்கழகம்.

5.மொரட்டுவை பல்கலைக் கழகம்.

6.யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

7.உறுகுணைபல்கலைக்கழகம்

8. கிழக்கு பல்கலைக்கழகம்

9. இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம்.

10.இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்.

11. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

12. இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்.

13. இலங்கை ஊவாவெல்லச பல்கலைக்கழகம்.

14. கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலை.

(15 ஆவது இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம். இதுபற்றிய விளக்கங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கைந்நூலில் இடம்பெறவில்லை.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்திலேயே இதற்குரிய வழிகாட்டல்களைப் பெறவே ண்டும். இது ஒரு மரபு சாராத பல்கலைக்கழகமாகும்)

### வளாகங்கள் - 03

1)ஸ்ரீபாளி வளாகம்

2)திருகோணமலை வளாகம்

3)வவுனியா வளாகம்.

### நிறுவகங்கள்-05

1)சுதேச மருத்துவ நிறுவகம்.

2)கம்பஹா விக்கிரமாராய்ச்சி நிறுவகம்.

3)கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரி.

4)சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்.

5)இராமநாதன் நுண்கலைக்கழகம்.

### மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டலோடு பின்வரும் நிறுவகங்களுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

1.மனிதவள மேம்பாட்டு நிறுவகம் (கொழும்பு பல்கலைக் கழகம்).

2.தொழில்நுட்ப நிறுவகம் (மொரட்டுவைப் பல்கலைக் கழகம்)

### பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்

1. இலங்கை பிக்கு பல்கலைக் கழகம்.

2.பொத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்.

3.ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (Cadets) என்பவற்றில் பட்டக்கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியும்.

(தொடரும்)

# கற்றாழைச் செய்கை

கற்றாழை வரட்சியான பகுதிகளில் வளர்ப்பதற்கேற்ற ஒரு மருந்துச்செடி ஆகும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு அழகுச் சாதனங்கள் மருந்துப் பொருட்கள் தயாரிப்பதற்கு கற்றாழை பெரிதும் பயன்படுகின்றது. வரட்சிக்கு ஒரு



வரப்பிரசாதமாக விளங்கும் கற்றாழை, லில்லியேசி தாவர குடும்பத்தைச் சேர்ந்தது.

இது ஆபிரிக்காவை தாயாகமாகக் கொண்டது. தென்னாபிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், இந்தியா போன்ற நாடுகளில் வணிக ரீதியாக பயிர் செய்யப்படுகிறது. இலங்கையில் கரையோரப்பகுதிகளில் அதிகளவில் காணப்படும் கற்றாழை, முக்கியமான பணப்பயிர்களில் ஒன்றாக மாறியுள்ளது.


பயன்கள்

கற்றாழையின் இலையிலிருந்து எடுக்கப்படும் "ஜெல்" சூரிய ஒளியுடன் கலந்துவரும் கடும் வெப்பத்தை ஏற்படுத்தும் காமா மற்றும் எக்ஸ்ரே கதிர் வீச்சுகளின் தீய விளைவுகளிலிருந்து சருமத்தை பாதுகாக்கின்றது. மேலும் சருமத்தின் ஈரத்தன்மையை காத்து சருமத்தின் நிறத்தையும் மேம்படுத்துகிறது. இதனால் வணிக ரீதியாக அதன் "ஜெல்" உலகெங்கிலும் சரும் லோசன், சவரம் செய்வதற்கான கிறீம், சம்பூ ஆகியவற்றில் சேர்க்கப்படுகின்றது.

கற்றாழையின் இலையில் 'அலோயின்', 'அலோசோன்' போன்ற வேதிப்பொருட்கள் உள்ளன. 'அலோயின்' வேதிப் பொருளின் அளவு நான்கிலிருந்து இருபத்தைந்து சதம் வரை இதன் இலையில் காணப்படுகிறது.

சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் கற்றாழைச்சாறு, இருமல், சளி, குடல்புண் ஆகியவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகின்றது. கடும் வயிற்றுப்புண், தோலில் ஏற்படும் தீக்காயம், அரிப்பு, வெட்டுக்காயங்கள் ஆகியவற்றிற்கும் மருந்தாகப் பயன்படுகின்றது.

**Aloe barbedensis miller** எனும் இனமே இலங்கையில் காணப்படுகின்றது. எல்லாவகையான மண்ணிலும் கற்றாழையை செய்கை பண்ணலாம். காரத்தன்மை 7 முதல் 8.5 வரை



உள்ள மண் வகைகளில் கற்றாழை வளர்கின்றது. நல்ல வடிகால் வசதியுடன் கூடிய மணற்பாங்கான நிலம் மிகவும் ஏற்றது.

25 முதல் 45 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை உள்ள பகுதிகளில் வணிக ரீதியாக பயிர் செய்யலாம்.

நடுகை

தாய்ச்செடியிலிருந்து ஒன்று அல்லது இரண்டு மாத வயதுடைய 3-5 இலை உடைய பக்க உறிஞ்சிகளைப் பிரித்து பயன்படுத்த வேண்டும். ஒரே அளவிலுள்ள பக்க உறிஞ்சிகளைத் தேர்ந்து எடுப்பது மிகவும் முக்கியம். இதனால் செடிகள் சீராக வளர்வதுடன் ஒரே சமயத்தில் அறுவடைக்கு வரும். கற்றாழையை தனிப் பயிராக செய்கை பண்ணும் போது ஏக்கருக்கு 6000 - 7000 உறிஞ்சிகள் தேவைப்படும். அதாவது 1500- 1750 உறிஞ்சிகள் நான்கு பரப்பிற்கு தேவை.

நிலம் பண்படுத்தல்

நிலத்தை இரண்டு முறை உழுது ஏக்கருக்கு 1500 கி.கி எரு இட்டு சமன் செய்து சிறிய பாத்திகளை அமைக்க வேண்டும்.

நடுகை இடைவெளி

செடிகள் நன்றாக வளர்வதற்காக 3 அடி X 3 அடி, இடை வெளி விட்டு நடுகை செய்ய வேண்டும்.

3 அடி X 2 அடி,

3 அடி X 1 அடி,

2 அடி X 1.5 அடி போன்ற இடைவெளியிலும் நடுகை செய்யலாம்.

பசளைப் பாவனை

கற்றாழைச் செடிகளுக்கு இராசாயன உரங்கள் தேவைக்கேற்ப இடவேண்டும். வளமான நிலங்களுக்கு எரு இடல் போதுமானது. ஏக்கருக்கு 1500 கி.கி. எனும் வீதத்தில் ஒவ்வொரு வருடமும் எரு இடவேண்டும். வளம் குறைந்த மண்ணிற்கு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தாவரத்திற்கு 200 கிராம் அசேதன உரத்தை இடவேண்டும்.

நீர்ப்பாசனம்

கற்றாழையை மானாவாரிப் பயிராக பயிர் செய்ய ஏற்றது. கோடை காலத்தில் பயிர் செய்ய ஐந்து நாள் நீர்ப்பாசன இடைவெளி போதுமானதாக அமையும். ஒரு தாவரத்திற்கு 90 மி.லீ. நீர் ஒரு நாளுக்கு போதுமானது.

நோய் பீடைத்தாக்கம்

கற்றாழையில் அதிக பூச்சி நோய் ஏற்படுவதில்லை. நீர் தேங்கும் நிலத்தில் அழுகல் நோய் ஏற்படும். நிலத்தில் வடிகால் வசதியை ஏற்படுத்துவதன் மூலம் இத்தாக்கத்தை குறைக்க முடியும்.

விளைச்சல்

ஒரு தாவரத்திலிருந்து ஒரு வருடத்திற்கு 8 கி.கி. கற்றாழை இலையை விளைச்சலாக பெறலாம். அறுவடையின் போது இலையின் விட்டம் 6-10 செ.மீ.ஆகவும் நீளம் 2 அடி ஆகவும் காணப்படுதல் சிறந்தது. அறுவடையின் போது இலையில் காணப்படும் வெள்ளைப்புள்ளிகள் மறைந்து இலை முழுமையாக பச்சையாக மாறிக் காணப்படும்.

முதிர்ச்சியடைந்த இலையில் ஆலோயின் அளவு மிக குறைவாகக் காணப்படும். ஒரு இலையின் நிறை 700 - 1500 கிராம் வரை வேறுபடும். ஒருவருடத்தில் ஒரு தாவரத்தில் இருந்து 12 இலைகள் வரை 3 தடவைகளில் அறுவடை செய்யலாம். இலையில் 80 முதல் 90 சதம் நீர் உள்ளதால் விரைவாக பழுதடைந்து விடும். இதனால் அறுவடை செய்த உடனே இலைகளை பக்குவப் படுத்தி அவற்றிலிருந்து ஜெல்லை பிரித்தெடுக்க வேண்டும்.

பன்னீர்ச்செல்வம் பிரியதர்ஷினி
விவசாயப் போதனாசிரியர்,
அளவெட்டி.

# முதலாம் தரத்திற்கு மாணவர்கள் இணைப்பு; கல்வி அமைச்சின் முக்கிய அறிவிப்பு!

(கொழும்பு)

இவ் ஆண்டில் முதலாம் தரத்தில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையானது எதிர்வரும் 16 ஆம் திகதி இடம் பெறவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் மாணவர்களை இணைத்துக்கொள்வது தொடர்பில் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாவும், முதலாம் ஆண்டியில் பிள்ளை களை இணைத்துக் கொள்வதில் சிக்கல் நிலைமை காணப்படின் அது தொடர்பில் மாவட்ட கல்வித் திணைக்களத் துக்கு அறிவிக்கு மாறும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (இ-7)



யாழ்.மருதங்கேணி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவினரால் சிரட்டையிலிருந்து அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அண்மையில் நடைபெற்றது. (படங்கள்:-தும்பளை செய்தியாளர்)

# குறைகளை பதிகம்



## பிறவுண் வீதி குறைகளைதல்

சீர் புகழ்பெறு யாழ்ப்பாணம்
சித்தர்கள் வாழ்ந்த ஞானபூமி
திகழொளி கடையிற் சுவாமிகள்
திருவடி பட்ட நீராவியடிப் பதி
முன்னம் யாழ் நகர் ஆண்ட கவர்னர்
பிறவுணனார் பெரும் புகழ் கருதி
சூட்டிய பெயர் பிறவுண் வீதி- இன்று
குன்றும் குழியுமாய் கிடப்பது காணீரோ
வெள்ளவத்தைக்கு ஈடு என்ற பெருமை
வெள்ளத்தைத் தவிர வேறில்லை
வந்த வெள்ளம் போக மனமின்றி
பிறவுண் வீதிக் குன்று குழிகளில்
தங்கி நின்று சொந்தம் கொண்டாட,
வீதிச் சிறப்பறியா சிங்கள மக்கள்
குன்று குழிகளில் கண்டி நடனம் புரிய,
நம்மவரோ சிவனாடும் பரதமே மேல் என்று
தாம் தீம் தோம் போட...
அன்னவரே யாழ்.மாநகர முதல்வர்
பெருந்தகையே
பதிகம் பாடவல்ல ஆணையாளர் சிலரே
ஆவன செய்வீர் என்று
இப்பதிகம் பாடினோம்- விரைந்து செய்வீர்
வில்லங்கம் இல்லா இவ்வீதிப் பயணம்
விதிவெல்ல வழிதருமே

-கூத்தனார்-

# 2019 இல் தனியார் வைத்தியசாலைகளின் கட்டணங்கள் வரையறை செய்யப்படும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

2019 ஆம் ஆண்டில் மேலும் பல மருந்துப் பொருட்களின் விலையைக் குறைத்தல் மற்றும் தனியார் வைத்தியசாலைகளின் கட்டணங்களை வரையறை செய்தல் ஆகியன தனது முதன்மை வேலை என்று சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

புத்தாண்டில் தனது அமைச்சில் நேற்று முன்தினம் கடமைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வருடங்களில் 73 வகையான மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டதா கவும், 2019 ஆம் ஆண்டில் அதனை 100 ஆக அதிகரிப்பது தனது நோக்கம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதாரத் துறையில் உலகம் முழுதும் பேசும் அளவுக்கு புரட் சியை கடந்த ஆண்டுகளில் ஏற்படுத்தியதாகவும் எமது நாட்டில் நூற்றுக்கு 75 வீத மானோர் தொற்றா நோய் காரணமாகவே உயிரிழப்பதாகவும் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனா ரட்ன தெரிவித்தார். (இ-7)

# போலி கஜமுத்துக்களுடன் இருவர் பொலிஸாரால் கைது

(மகியங்கனை)

போலி ஏழு கஜமுத்துக் களை ஒன்றரைக் கோடி ரூபாவிற்கு விற்பனை செய்ய முயற்சித்த இருவர் மகியங்கனைப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப் பட்டு ள்ளனர்.

மேற்படி கஜமுத்துக்கள் குறித்து மகியங்கனைப் பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைக்கவே பொலிஸார் மாற்றுடையில் கஜமுத்துக் களைக் கொள்வனவு செய்பவர்கள் போன்று கஜமுத்துக்கள் விற்பனை செய்பவர்களிடம் சென்றனர்.

அங்கு சென்ற பொலி ஸார் கஜமுத்துக்களை விலை பேசி பணத்தைக் கொடுக் கும் போது கஜமுத்துக்களை விற்பனை செய்த இருவரை கஜமுத்துக் களுடன் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் மகியங்கனை நீதி வான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# கைத்துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்பு

## சந்தேக நபர் தப்பியோட்டம்; இராணுவம் சுற்றிவளைத்து

## பல மணிநேரம் மோப்பநாய்களுடன் தேடுதல்

### புதூர் காட்டில் நேற்று பதற்றம்





(குருமன்காடு)

வவுனியா புதூர் பகுதியில் ஆயுதங்களுடன் சென்ற ஒருவரை சோதனையிட முற்பட்ட போது தப்பியோடிய நிலையில் அவரது பையில் இருந்த உரப்பையிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக தெரிவித்து அப்பகுதியில், இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா புதூர் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் ஒருவரின் நடமாட்டம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அப்பகுதியில் பொலிஸார் பதுங்கியிருந்துள்ளனர்.

இதன்போது நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் அங்கு வந்த ஒருவரை மறித்து சோதனையிட முற்பட்ட போது குறித்த நபர் தான் கொண்டு வந்த பையை வீசிவிட்டு அப்பகுதியில்இருந்து காட்டுக்குள் தப்பியோடியதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு அப்பகுதியில்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. குறித்த பையில் இருந்து கைத்துப்பாக்கி, நான்கு கைக்குண்டுகள், கைத்துப்பாக்கிக்கான ரவைகள் அதன்கூடு உட்பட மேலும் சில பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த நபரை கைது செய்யும் நோக்குடன் காட்டுப்பகுதியில் ஆயுதங்கள் இருக்கலாம் என்ற வகையிலும் புதூர் முதல் கனகராயன்குளம் வரையுமான காட்டுப்பகுதி மற்றும் கிராமங்களை உள்ளடக்கி இராணுவத்தினர்சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது விசேட அதிரடிப்படையினர் மற்றும் மோப்ப நாய்களின் உதவியும் நாடப்பட்டு சோதனைகள் இடம்பெற்று வருவதுடன் யுத்த நிறைவின் பின்னர் அப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சுற்றி வளைக்கப்பட்டுள்ளமை பெரும்பதற்றத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன் அப்பகுதி மக்களின் இயல்பு நிலையும் பாதிப்படைந்துள்ளது. (2-250-281)

வன்னி வலம்

## உயிலங்குளம் 50 வீட்டுத்திட்ட 8 குடும்பங்களுக்கு காணி உறுதிகள்

### நேற்று வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் 50 வீட்டுத் திட்டத்தை சேர்ந்த எட்டு குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் நேற்று துணுக்காய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் 50 வீட்டுத் திட்டமானது 2012 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் நிதியுதவிகளில் SLRC நிறுவனத்தால் 50 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு காணிகள் வழங்கப்பட்டு பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுவலுவுள்ளோர் அடங்கலாக 50 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

இருப்பினும் அவர்களது காணிகளுக்கான உறுதிப் பத்திரங்கள் இன்றுவரை வழங்கப்படாத நிலையில் குறித்த பகுதியில் ஆரம்பம் முதல் நிரந்தரமாக வசித்து வரும் எட்டு குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை துணுக்காய் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி நேற்று வழங்கி வைத்தார்.

அங்கு வசித்து வரும் ஏனையவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களும் விரைவில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார். (2-281)

## பண்ணை உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தும் வசதியின்மையால் அவதி

### பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தின்பண்ணை வேலைப் பொருட்களை சந்தைப்படுத்தக்கூடிய வசதிகள் இல்லை. இதனால் வருமானம் பெறும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள வன்னேரிக் குளம் பகுதியில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பண்ணை வேலை உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து அதனை விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமது வாழ்வாதாரத்தை நடத்துகின்றனர்.

இந்நிலையில் தற்போது இவ்வாறான பனை உற்பத்திப்பொருட்களை உரிய முறையில் சந்தைப்படுத்தமுடியாத நிலைகாணப்படுவதாகவும் தமது உற்பத்திப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு சென்று விற்பனை செய்ய வேண்டியுள்ளதால் போக்குவரத்துக்கு அதிக பணத்தை செலவழிக்க வேண்டியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இவ்வாறான தொழில்கள் மூலம் தமக்கான வருமானங்கள் கிடைக்காமையினால் தொழில்களை தாம்கைவிட வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனை நம்பி வாழும் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் தெரிவித்துள்ளன. (2-315)

## கற்கைநெறிகள் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தேசியபயிலுனநர்கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் சுகாதாரத்துறை, கட்டட நிர்மாணத்துறை, மின்னியல் மின்னணு மற்றும் தொலைத் தொடர்புத்துறை, ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை விவசாயம் மற்றும் கால்நடைத்துறை ஆகிய துறைகளில் பல கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முற்று முழுதாக இலவசமாக கொண்ட இக்கற்கை நெறி நிறைவில்தேசிய தொழிற்றகைமைச் சான்றிதழ் (NVQ) வழங்கப்படும்.

அத்தோடு தொழிற் பயிற்சியுடன் கூடிய பயிற்சி நெறி என்பது குறிப்பிடத்தக்கது.

மேலதிக தொடர்புகளுக்கு மாவட்ட அலுவலகம், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, மாங்குளம்வீதி முள்ளியவளை அல்லது 021 206 1012 மற்றும் பரிசோதகர், ஜெ.துசாந்தன் 071 054 2383 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(கிளிநொச்சி)

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைக்கல்விப் பிரிவு, தமிழ் இணையக் கல்விக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கிளி/முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், 32 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், சிரேஷ்ட விரிவுரையாளர் க.ரஜனிகாந்தன், மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வராசா கஜானன், செயலாளர் சண்முகம் சங்கீதன், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

## சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் சிறிதரன் எம்.பிக்கும் இடையில் கலந்துரையாடல்

### கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முல்லைத்தீவு சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களிற்கும், பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. குறித்த சந்திப்பு நேற்று பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடியில் அமைந்துள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. குறித்த சந்திப்பில் சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான த.குருகுலராஜா, பசுபதிப்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பில் முன்பள்ளிகளை படையினர் நடாத்தக்கூடாது என்ற விடயத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தமையால் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்குட்பட்ட அனைத்து முன்பள்ளிகளையும் விட்டு எதிர்வரும் மார்ச் மாதத்திற்கிடையில் வெளியேற வேண்டும் என்ற விடயம் காரணமாக இங்கு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக பணியாற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில்வடக்கு மாகாண ஆளுநராக இருந்த றெஜினோல்ட் கூரே இதற்கு காரணம் கூட்டமைப்பினர் என தெரிவித்த விடயம்உண்மையா என சிவில் பாதுகாப்பு திணைக்களம் சார்பில் சிறிதரனிடம் வினவப்பட்டது.

இதற்கு பதில் அளித்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், அந்த கலந்துரையாடலில் சிவில் இராணுவத்தினரால் முன்பள்ளிகள் நடத்தக்கூடாது என தெரிவிக்கப்பட்ட விடயம் உண்மை எனவும், அவர்களை சிவில் பாதுகாப்பு திணைக்கள ஆசிரியர்களாக இல்லாது, அவர்களை முன்பள்ளி ஆசிரியர்களாக அதே சம்பளத்துடன் கல்வி அமைச்சின் கீழ் அல்லது மத்திய அரசின் கீழ் உள்வாங்க வேண்டும் என தாம் கோரியதாக அவர் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையில்,

முன்பள்ளிகளை இராணுவம் நடத்தக்கூடாது என்பது தொடர்பில் பல தடவை நாம் வலியுறுத்தி வந்ததாகவும், அவ்வாறு ஆசிரியர்களாக உள்ளவர்களை மாகாண சபை அல்லது மத்திய அரசின் கீழ்உள்வாங்கப்பட வேண்டும் என தாம் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்தார். (2)

# ஊடகச் சுதந்திரத்தில் இலங்கை முன்னேற்றம்

(கொழும்பு)

எல்லைகளற்ற நிருபர் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக சுதந்திரம் தொடர்பான வருடாந்த சுட்டியில் இலங்கை முன்னேற்றமடைந்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு அமைய, கடந்த 2017 ஆம் ஆண்டில் 141 ஆவது இடத்தில் இருந்து இலங்கை கடந்த 2018 ஆம் ஆண்டில் 131 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இந்த சுட்டியின்படி உலகில் ஊடக சுதந்திரம் கூடுதலாக உள்ள நாடு நோர்வே ஆகும்.

ஊடக சுதந்திரம் மிகவும் குறைவாகபேணப்படும் நாடாக எரித்திரியா அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவில் இந்தியா 138 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 146 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 139 ஆவது இடத்திலும் உள்ளன. இதேவேளை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகியன கீழ் மட்டத்தில் இருக்கும் அதே வேளை, மாலைதீவு 120 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 118 ஆவது இடத்திலும், நேபாளம் 106 ஆவது இடத்திலும் உள்ளன.

இந்த சுட்டியில் 94 ஆவது இடத்தில் உள்ள பூட்டான் தெற்காசியாவில் ஊடக சுதந்திரத்தை கூடுதலாகப் பேணும் நாடாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




**கேரளத்தின் துஞ்சன் பறம்பில் கடந்த வாரம் நடைபெற்ற சர்வதேச மகாபாரத விழாவில் "Devakanthan's Katha kalam- yet another Maha bharata text" என்னும் பொருள் பற்றி கவிஞர் சோ.பத்மநாதன் உரையாற்றினார்.**

# ஆசியாவில் மிகவும் மோசமான நாணயமாக மாறிய இலங்கை ரூபா

(கொழும்பு)

ஆசியாவில் பெறுமதியற்ற நாணயப் பட்டியலில் இலங்கை ரூபாயும் இணைந்துள்ளதாக சர்வதேச ஊடக ரொய்ட்டர் செய்தி சேவை அறிவித்துள் ளது. கடந்த வருடம் ரூபாயில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி காரண மாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 153.46 ரூபாவாக காணப்பட்டது. எனினும் அது வருட இறுதியில் 184.63 ரூபாயாக பதிவாகியுள்ளது.

அதற்கமைய கடந்த வருடத்தில் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 19 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலைமை அடுத்த வருடத்தில் நாட்டின் பொருளாதாரத்தை எந்தளவு பாதிக்கும் என்பது தொடர்பில் பொருளாதார வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ரூபாவின் பெறுமதியை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கொழும்புப் பல்கலைக்கழக பொருளாதார பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையில் இருந்து தப்பிப்பதற்கு ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அவசியம் ஊக்குவிக்க வேண்டும் என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)


# நாட்டை ஆட்சி செய்யக் கூடிய உண்மையான தலைவர்கள் 'ஐ.தே.கவில் மட்டுமே - நளின்'

(குருநாகல்)

யார் என்ன கூறினாலும் நாட்டை ஆட்சி செய்யக் கூடிய உண்மையான தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலேயே இருப்பதாக பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை செய்தது. இதுவரை அப்படியான அபிவிருத்தித் திட்டங்களை எந்த அரசாங்கங்களும் செய்யவில்லை.



எதிர்காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் ஒன்று அமைவதற்குத் தேவையான திட்டங்களை தற்போது வகுத்து வருவதாகவும் நளின் பண்டார தெரிவித்தார். (இ-7)

# மாணவர்களின் பிரச்சினைகளை அரசியலாக மாற்ற சிலர் முயற்சி

## அமைச்சர் ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயர்கல்வி மாணவர்களின் பிரச்சினைகளை சிலர் தங்களின் அரசியலுக்கு பயன்படுத்த முனைகின்றனரென அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உயர்கல்வி மாணவர்கள் தங்களின் பிரச்சினைக்காக தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதன்போது மோதல்களும் இடம்பெறுகின்றன.

ஆகையால் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பில், அவர்களுடன் முதலில் கலந்துரையாடி பின்னர் அவ்விடயத்தில் உரிய தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதேவேளை ஒரு சிலர் மாணவர்களின் மோதல்கள் மற்றும் எதிர்ப்பு பேரணிகள் ஆகியவற்றின் ஊடாக தங்களது அரசியல் அபிலாசைகளைநிறைவேற்றிக்கொள்ள முனைகின்றனர். அத்தகையவர்களை கடுமையாக எச்சரிக்கின்றேன்" என ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வரையறுக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை.கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு- கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இற்கு அமைய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. உங்குராலகே சுபசிங்க ஆகிய நான் 04.08.2009 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் பின்வரும் உத்தியோகத்தர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இந்தக் கூட்டங்களிற் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக் குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையை கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவராவது (02) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- இரண்டு அங்கத்தவர்கள் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு வாக்களிக்கத் தகுதியுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரால் 19.05.1998 ஆம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக கருதி அன்றைய கூட்டத்திற்கு சமுகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்**

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் இடமும் 05.01.2019 சனிக்கிழமை**

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | 01 | பளை | திரு.அ.செந்தூச்செல்வன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/பளை மத்திய கல்லூரி |
| 02 | 02 | மாசார் | திரு.சி.சிறீதரன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/மாசார் அ.த.க. பாடசாலை |
| 03 | 03 | முள்ளிப்பற்று | திரு.தே.வேணுகோபாலன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை |
| 04 | 04 | சோரன்பற்று | திரு.உ.ஜெயந்தபிரகாஸ் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/ சோரன்பற்று கணேசா வித்தியாலயம் |
| 05 | 05 | புலோப்பளை | திரு.ம.லெட்டினன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/புலோப்பளை றோ.க.த.க. பாடசாலை |
| 06 | 06 | இத்தாவில் | திரு.க.பாலகிருஸ்ணன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை |
| 07 | 07 | முகமாலை | திரு.பா.வாகீசன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/முகமாலை றோ.க. த.க. பாடசாலை |
| 08 | 08 | கிளாலி | திரு.க.விஸ்ணுகரன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/கிளாலி றோ.க.த.க. பாடசாலை |
| 09 | 09 | புலோப்பளை கிழக்கு | திரு.அ.ஜேம்சன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை |
| 10 | 10 | அல்லிப்பளை | திரு.க.உதயரூபன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/அல்லிப்பளை சி.சி.த.க.பாடசாலை |
| 11 | 11 | கச்சார்வெளி | திருமதி.மு.புஸ்பலக்சுமி | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கச்சார்வெளி பொது நோக்கு மண்டபம் |
| 12 | 12 | தம்பகாமம் | திரு.செ.செல்வக்குமாரன் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | வண்ணாங்கேணி வடக்கு பாலர் பாடசாலை |
| 13 | 13 | சங்கத்தார் வயல் | திரு.ஜெ.சஞ்சீவ் | 05.01.2019 சனிக் கிழமை மு.ப 10 மணி | கிளி/கோயில் வயல் அ.த.க.பாடசாலை |

**திரு.உங்குராலகே சுபசிங்க,**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**கிளிநொச்சி.**

(C-4976)

# பாரதம்

## குடிசைக்குள் புகுந்த லொறி; 10 பேர் உடல் நசுங்கிப் பலி



(லக்னோ)

உத்தரப்பிரதேச மாநிலம் சந்தவுலி மாவட்டத்தில் வீதியோர குடிசைகள் மீது லொறி மோதிய விபத்தில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலத்தின் சந்தவுலி மாவட்டம் வழியாக கால்நடைகளை ஏற்றிக் கொண்டு லொறி ஒன்று சென்றுகொண்டிருந்த வேளை அந்த லொறி மால்டா கிராமத்தின் அருகில் சென்ற போது, தனது கட்டுப்பாட்டை இழந்தது. இதனால், நிலை தடுமாறிய லொறி வீதியோர குடிசைகள் மீது வேகமாக மோதியது.

இந்த திடீர் விபத்தில் குடிசையில் இருந்தவர்களில் 10 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக பலியாகினர். மேலும் ஒரு சிறுமி படுகாயம் அடைந்தார். (4-7)

## ஸ்டெர்லைட் ஆலை விவகாரம்

## பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து தமிழக அரசு மேன்முறையீடு

(சென்னை)

ஸ்டெர்லைட் ஆலை விவகாரம் தொடர்பாக பசுமை தீர்ப்பாயம் அளித்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது.

தூத்துக்குடியில் கடந்த 22 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வந்த ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதியை சுற்றியுள்ள மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டம் கடந்த மே 22ஆம் திகதி வன்முறையாக வெடித்தது.

இதனை தொடர்ந்து பொலிஸார் வன்முறையை கட்டுப்படுத்த நடத்திய துப்பாக்கி சூடு சம்பவத்தில் பொதுமக்களில் 13 பேர் பலியாகினர். தொடர்ந்து பதற்றம் நீடித்த நிலையில், மக்களின் கோரிக்கையை ஏற்று ஆலையை மூட அரசாணை வெளியானது.

இந்நிலையில், தூத்துக்குடியில் அமைக்கப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையை மூடியது இயற்கை நீதிக்கு எதிரானது என்றும், ஆலையை திறக்கலாம் என்றும் மேகாலயா மாநிலத்தின் முன்னாள் தலைமை நீதிபதி தருண் அகர்வால் தலைமையிலான உண்மை கண்டறியும் குழு, தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைமை அமர்வில் அறிக்கை அளித்தது.

இந்த நிலையில், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை 3 வாரத்தில் திறக்க அனுமதி வழங்க தமிழக மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவுக்கு எதிராக அரசு மேல்முறையீடு செய்யும் என முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்திருந்தார்.

இதனிடையே ஸ்டெர்லைட் ஆலையை நிர்வகிக்கும் வேதாந்தா குழுமத்தின் சார்பில் உச்ச நீதிமன்றம் கடந்த டிசெம்பர் 17ஆம் திகதி கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் தங்களது கருத்தை அறியாமல் உச்ச நீதின்றம் எந்தத் தடை உத்தரவும் பிறப்பிக்கக்கூடாது என அந்த கேவியட் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஸ்டெர்லைட் ஆலை விவகாரம் தொடர்பாக பசுமை தீர்ப்பாய உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

இந்த மேல்முறையீடு வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4-7)

## முக்கிய அகதி முகாம்களை மூடுவதாக அறிவித்த அவுஸ்திரேலியா

(சிட்னி)

இரண்டு அதிமுக்கிய உயர்பாதுகாப்பு கொண்ட அகதி முகாம்களை மூடவுள்ளதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக அவுஸ்ரேலியாவிற்கு வருகை தரும் அகதிகளின் எண்ணிக்கை பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினைத் தொடர்ந்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மெல்பேர்னின் **Maribyrnong** குடிவரவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இறுதி அகதி வெளியேறுவதையடுத்து குறித்த முகாம் இந்த வாரம் மூடப்படவுள்ளது.

அத்துடன், சிட்னி வில வூட் தடுப்பு முகாமின் பகுதியாகவுள்ள **Blaxland centre** அங்குள்ள சிறு எண்ணிக்கையிலான அகதிகள் ஏனைய முகாம்களுக்கு மாற்றப்படுவதை தொடர்ந்து எதிர்வரும் மே மாதம் மூடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலியாவிற்கு படகுகள் மூலம் அதிகளவான அகதிகள் வருகை தந்தமையினைத் தொடர்ந்து அப்போதைய லேபர் அரசாங்கம் 17 புதிய முகாம்களை திறந்திருந்தது.

லேபர் ஆட்சியில் மொத்தம் 26 அகதி முகாம்கள் இயங்கிவந்தன. எனினும், லிபரல் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், படிப்படியாக கட்டுப்படுத்தப்பட்ட அகதிகளின் வருகைக்கு சமாந்தரமாக அகதி முகாம்களும் மூடப்பட்டன.

இந்த நிலையில் தற்போது அவுஸ்திரேலியாவில் எட்டு அகதி முகாம்கள் மாத்திரமே சுமார் 1250 அகதிகளுடன் இயங்கி வருகின்றன. அத்துடன், அவுஸ்திரேலியாவிற்கு வெளியே நவுறு - மனுஸ் தீவுகளில் சுமார் ஆயிரம் அகதிகள் உள்ளனர்.

சட்டவிரோதமாக நாட்டுக்கு வந்தவர்கள், அகதிகளாக சமூகத்தில் இணைக்கப்பட்ட பின்னர் தவறான நடத்தைகளின் பிரகாரம் கைது செய்யப்பட்டு மீண்டும் தடுப்புக்கு கொண்டுவரப்பட்டவர்கள், விஸா கால எல்லை முடிவடைந்த பின்னரும் நாட்டில் தங்கியிருந்தவர்கள், தாங்கள் இந்த நாட்டில் தங்கியிருப்பதற்கான காரணத்தை சட்ட ரீதியாக நிரூபிப்பதற்காக வழக்குகள் மற்றும் மேன்முறையீடுகள் தாக்கல் செய்துள்ளவர்கள் என பலதரப்பட்டவர்கள் அவுஸ்திரேலிய அகதிகள் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## பிலிப்பைன்ஸில்

## உயிரிழப்பு 90



(மணிலா)

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது. அந்நாட்டு பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் நேற்று புதன்கிழமை இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸில் ஆண்டுதோறும் 20 புயல்கள் உருவாகின்றன. இதனால் பெய்து வரும் கனமழையில் ஏற்படும் வெள்ளத்தில் சிக்கி நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழக்கின்றனர்.

இந்நிலையில், அந்த நாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள பிகோல் மற்றும் கிழக்கு விசயாஸ் பிராந்தியங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகின்றது. இதில் அங்குள்ள 300 இற்கும் மேற்பட்ட பகுதிகள் பலத்த சேதமடைந்துள்ளன.

கனமழையால் நீர் நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஊர்களுக்குள் தண்ணீர் புகுந்து வெள்ளம்

## புத்தாண்டு கொண்டாட் ஒரே குடும்பத்தைச் சே

(தாய்பே)

தாய்லாந்தில் இடம்பெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுசீப் சோர்ந்சாங் (**Sucheep Sornsung**) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த ஆறு பேர் உயிரிழந்தனர்.



மனைவியின் குடும்பத்தினர் தம்மை


## ஹாஸ் வெடித்து சி

## பலி எண்ணிக்கை 7



# வெளிநாடு

## ...ில் நிலச்சரிவு ...0 ஆக உயர்வு!



கரை புரண்டோடுகிறது. ஆயிரக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

மழை மற்றும் வெள்ளத்தை தொடர்ந்து அதிகளவான இடங்களில் மண்சரிவு ஏற்பட்டது. இதில் ஏராளமான வீடுகள் மண்ணோடு மண்ணாக புதைந்தன. அதிகளவான இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல்வேறு நகரங்கள் இருளில் மூழ்கின. தகவல் சேவை தொடர்பு முடங்கியது.

இந்தநிலையில் மண்சரிவு மற்றும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, குறித்த பகுதிகளில் தொடர்ச்சியாக மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## இந்தோனேஷியாவில் நிலச்சரிவு உயிரிழப்பு 20 ஆக உயர்வு

### 20 பேர் மாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளதுடன், 20 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்தோனேசியாவில்மேற்கு ஜாவா மாகாணத்தில் கன மழை பெய்து வருவதால் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை மாலை பல்வேறு பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டது. இதில் ஏராளமான வீடுகள் இடிபாடுகளில் சிக்கி புதையுண்டன. அந்த பகுதிகளில் மீட்புக்குழுவினர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்தநிலையில் மண்சரிவில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளதுடன், 20 பேர் காணாமல் போயுள்ளதாக நேற்றைய தினம் புதன்கிழமை அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும்அதிகரிக்க கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.



மண்சரிவு ஏற்பட்ட பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 63 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தோனேசியாவில் மேற்கு ஜாவா மாகாணத்தில் மீண்டும் மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## மினி பேருந்து தீப்பிடிப்பு மூன்று பேர் உயிரிழப்பு

(ஏகடெரின்பர்க்)

ரஷ்யாவில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்த இடத்தின் அருகே மினி பேருந்து தீப்பிடித்து வெடித்ததில் 3 பேர் பலியாகினர்.


ரஷ்ய நாட்டில் மேக்னிடோகார்ஸ்க் என்ற நகரில் கார்ள் மார்க்ஸ் மற்றும் பிரவடா ஆகிய இரு தெருக்கள் சந்திக்கும் பகுதியில் சென்று கொண்டிருந்த மினி பேருந்து திடீரென தீப்பற்றி எரிந்தது.



இதில் பேருந்தில் இருந்த 3 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர். மினி பேருந்தினுள் 2 எரிவாயு சிலிண்டர்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு உபகரணங்கள் செயலிழந்ததால் பேருந்து தீப்பிடித்தபோது, எரிவாயு சிலிண்டர்கள் வெடித்ததாக உள்துறை அமைச்சகமும் தெரிவித்துள்ளது.(4-7)

## ...ாட்டத்தில் நடந்த துயரம் ...சேர்ந்த 7பேர் உயிரிழப்பு



உரிய வகையில் வரவேற்காமல் அவமதித்ததாக கூறியே குறித்த நபர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது உயிரிழந்தவர்களில் 9 வயது மகனும் 6 வயது மகளும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டநபர்தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-7)

## இடிபாடுகளுக்குள் சிக்கி 35 மணிநேரம் தவித்த குழந்தை உயிருடன் மீட்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் 35 மணி நேரம் சிக்கி தவித்த குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது.

ரஷ்யாவில்மேக்னி டோகோர்ஸ் நகரில் உள்ள 10 மாடி குடியிருப்பு இடிந்தது. அதில் இருந்த ஒரு வீட்டில் ஏற்பட்ட கியஸ் கசிவால் இந்த விபத்து நிகழ்ந்தது.

அதில் 48 வீடுகள் சேதம் அடைந்தன. இடிபாடுகளில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். இன்னும் 36 பேரை காணவில்லை. காயம் அடைந்த பலர் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் இடிபாடுகளில் சிக்கி தவிப்பவர்களும் மீட்கப்பட்டு வருகின்றனர்.

அப்போது இடிபாடுகளுக்கு இடையே குழந்தையின் அழுகுரல் கேட்டது. அதன் பின்னர்தான் 11 மாத ஆண் குழந்தை உயிருடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தலையில் பலத்த காயம் இருந்தது. குழந்தையை மீட்ட குழுவினர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

விபத்து நடந்து 35 மணி நேரத்துக்கு பிறகு குழந்தை உயிருடன் மீட்கப்பட்டுள்ளது அனைவரையும் மகிழ்ச்சியிலும், ஆச்சரியத்திலும் ஆழ்த்தியது. குழந்தையின் உடலை படுக்கை சுற்றியிருந்ததால் உயிர்தப்பியுள்ளது. (4-7)

## ...சிதறியதில் ...7 ஆக உயர்வு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் குடியிருப்பில் காஸ் கசிந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது.

ரஷ்ய நாட்டின் மாக்னிடோகோர்ஸ்க் பகுதியில் உள்ள ஆர்ஸ்க் நகரில் குடியிருப்பு பகுதி அமைந்துள்ளது. இந்த குடியிருப்பில் நேற்று முன்தினம் திடீரென காஸ் கசிந்து விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் குடியிருப்பில் வசித்து வந்த 4 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். இரு குழந்தைகள் உட்பட 4 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் காணாமல் போன பலரை தேடி வருகிறோம் என முதல் கட்ட தகவல் வெளியானது.

தகவலறிந்து தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து போராடி தீயை அணைத்தனர். இந்த தீவிபத்தில் அந்த குடியிருப்பு கட்டடம் பலத்த சேதமடைந்தது.

இந்நிலையில், காஸ் கசிந்த விபத்தில் கட்டட இடிபாடுகளில் சிக்கிய மேலும் 3 பேரின் சடலங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

இதையடுத்து, இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது. தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது என மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (4-7)

## பிரேஸிலின் புதிய ஜனாதிபதியாக ஜெய்ர் பொல்சொனாரோ பதவியேற்றார்

(பிரேஸிலியா)

பிரேஸிலின் புதிய ஜனாதிபதியாக, முன்னாள் இராணுவத் தளபதி ஜெய்ர் பொல்சொனாரோ (Jair Bolsonaro) பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இவர் புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



பிரேஸிலில் கடந்த ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

இதில், இடதுசாரி தொழிலாளர் கட்சியின் பெர்னாண்டோ ஹட்டாட்டை எதிர் கொண்ட 63 வயதான ஜெய்ர் பொல்சொனாரோ, சிறுவாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இதேவேளை, ஊழலை ஒழிப்பதாகவும் நாட்டில் குற்றங்களை இல்லாதொழிப்பதாகவும் பொல்சொனாரோ தமது தேர்தல் பிரசாரங்களில் உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

# சோமாவதி விகாரையில் ஜனாதிபதி வழிபாடு





(கொழும்பு)

புத்தாண்டில் அலுவல்களை ஆரம்பிக்கும் வகையில் நேற்று முன்தினம் முற்பகல் வரலாற்று முக்கியத்துவமிக்க சோமாவதி புண்ணிய பூமிக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு சமய கிரியைகளில் ஈடுபட்டார்.

சோமாவதி ரஜமகா விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய பஹமுனே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரரைச் சந்தித்து ஜனாதிபதி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து அங்கு இடம்பெற்ற விசேட சமய கிரியைகளில் கலந்துகொண்ட ஜனாதிபதிக்கு மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஆசீர்வதித்தனர். (இ-7)

# ஜே.வி.பி.கிளர்ச்சியை ஒடுக்கிய டி.ஐ.ஜி.உடுகம்பொல மரணம்



(கொழும்பு)

வடக்கிலும் தெற்கிலும் ஏராளமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்களுக்குள்ளாகிய, முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல நேற்று முன்தினம் மரணமானார்.

யாழ்ப்பாணத்தில்பொலிஸ் கண்காணிப்பாளராக இருந்த போது, வடக்கில் விடுதலைப் புலிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த உடுகம்பொல, 1989 இல் தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச்சியை ஒடுக்குவதில் முக்கிய பங்காற்றினார்.

உடுகம்பொலவின் கீழ் உருவாக்கப்பட்ட சிறப்பு பொலிஸ் குழு ஜே.வி.பி. உறுப்பினர்களை வேட்டையாடுவ்திலும் கிளர்ச்சியை ஒடுக்குவதிலும் தீவிர பங்காற்றியிருந்தது.

இதன்போது, ஈவிரக்கமற்ற சித்திரவதைகளையும் மோசமான மனித உரிமை மீறல்களையும் புரிந்ததாக உடுகம்பொல மீதும் பொலிஸார் மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

எனினும், இவருக்கு எதிராக எந்த நீதி விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை. 40 ஆண்டு காலம் பணியாற்றிய இவர், தனது 83 ஆவது வயதில்நேற்றுமுன் தினம் மரணமானார்.(இ-7)

# ஆர்ப்பாட்டத்துடன் ஆரம்பம்





(அட்டாளைச்சேனை)

நாடு தழுவிய ரீதியில் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றவற்றில் ஆண்டின் முதலாம் நாள் சேவை சத்தியப்பிரமாண நிகழ்வுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில் அட்டாளைச்சேனை பிரதேச சபையில் மட்டும் வித்தியாசமான நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளரின் இடமாற்றத்தைக் கண்டித்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஆளும் தரப்பு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களால் நேற்று முன்தினம் பிரதேச சபை முன்பாக கவனயீர்ப்புப்போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளராகச் செயற்பட்டு வந்த எம்.ஐ.எம்.பாயிஸை நிந்தவூர் பிரதேச சபைக்கு பதில் செயலாளராக 2019.01.01 முதல்கடமைகளைப் பொறுப்பேற்குமாறு கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் எம்.டபிள்யூ:ஜி.திஸாநாயக்கவினால் ஒப்பமிட்டு மேற்படி இடமாற்றத்திற்கான கடிதம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இவ் இடமாற்றத்தினைக் கண்டித்தே மேற்படி கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட பிரதேச சபை உறுப்பினர்கள் பல்வேறு வாசகங்கள்அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் இடமாற்றத்தினைக் கண்டித்த கோஷங்களுடனும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தவிர, பிரதேச சபையின் பிரதான நுழைவாயிலை மூடி இவ்வார்ப்பாட்டக்காரர்கள் செயற்பட்டதனால் பிரதேச சபையின் அன்றாட நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையில் காணப்பட்டது. பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை மேற்கொள்ளவதில் சிக்கல் நிலை தோன்றியதால் அலுவலம் வெறிச்சோடிக்கிடந்தது.

"செயலாளர் செய்த குற்றம் என்ன?" வேண்டாம் வேண்டாம் அரசியல் பழி வாங்கல் வேண்டாம் "வேண்டும் வேண்டும் இந்த செயலாளரே வேண்டும்" "குழப்பாதே குழப்பாதே சீரான நிர்வாகத்தைக் குழப்பாதே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனித மூளையும் மாபெரும் இயற்கையும்!

சாலமோன் என்பவர் ஒரு மிகப் பெரிய ஞானி.

அவருக்கு ஒரு சந்தேகம் வந்தது! இந்த உலகத்திலே நல்லவன் கஷ்டப்படுகிறான்!

கெட்டவன் சந்தோஷமா இருக்கிறான்! இது ஏன்?

சில பேரிடம் செல்வம் நிறைய இருக்கு! ஆனால் குழந்தை இல்லை! சில பேர் சாப்பாட்டுக்கே சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஏகப்பட்ட குழந்தைகள் பிறந்திருக்கும்! இது ஏன்?இது கடவுள் செயல் என்று சில பேர் சொல்லலாம்! அப்படி என்றால் இந்தச் செயல் நியாயமா?

சரி இது சாத்தானுடைய செயல் என்று சில பேர் சொல்லலாம்! அப்படி என்றால் கடவுள் சக்திக்கு மீறியும் சில செயல் நடக்க முடியுமா?

இப்படி எல்லாம் அவருக்கு சந்தேகம்! சாலமோன் யோசித்து யோசித்துப் பார்த்தார். ஒன்றும் புரியவில்லை. பல நாள் சிந்தித்துப் பார்த்தார் ஒன்றும் விளங்கவில்லை!

வீட்டுக்குள்ளே இருந்து யோசித்துப் பார்த்தார்!

வீதியிலே நடந்துகொண்டு யோசித்துப் பார்த்தார்! கடற்கரைக்கு போய் தண்ணி ஓரமா நடந்து பார்த்தார்.

ஒன்றும் பிரயோசனமில்லை! விடை கிடைக்கவில்லை! சாலமோன் ஞானி தன் முயற்சியை கைவிடவில்லை! எப்படியும் இதுக்கு விடைகண்டு பிடித்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டார்.

காலையிலே எழுந்திருக்க வேண்டியது !கடற்கரை போக வேண்டியது! யோசிக்க வேண்டியது ! மாலை வீட்டுக்கு வர வேண்டியது!

தினமும் இப்படியே செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் கடற்கரையிலே நடந்து கொண்டிருந்தபோது ஒரு சின்னப் பையன் கொட்டாங்குச்சி ஒன்றை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்ததைப் பார்த்தார். எப்படி? கடல் தண்ணியை கொட்டாங்குச்சியாலே இதைப் பார்த்தார் .

மாலை திரும்பி வரும் போது பார்த்தார். அப்பவும் அந்த பையன் அதே வேலையை செய்து கொண்டிருந்தான். ஞானிக்கு சந்தேகம்!

"அந்தப் பையனை கூப்பிட்டார். விசாரித்தார். தம்பி! இருட்டிப் போச்சே! வீட்டுக்குப் போகவில்லையா?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பையன், "உங்க வேலை முடிந்து போச்சுப்போல இருக்கு! அதான் வீட்டுக்குப் போறீங்க!என் வேலை இன்னமும் முடியவில்லை! அதை முடித்து விட்டுத்தான் வீட்டுக்குப் போவேன்" என்றான்.

தம்பி! அது என்ன வேலை? என்று கேட்டார் ஞானி.

அதுக்கு அவன்,

இந்த கடல் தண்ணி பூராகவும் இந்தக் கொட்டாங்குச்சியாலே இறைத்து கரையிலே ஊற்றுகிற வேலை என்றான்! ஞானி ஆச்சரியப்பட்டார்! சிரித்தார்!

தம்பி! நீ எவ்வளவு? கடல் தண்ணி எவ்வளவு?

உன் கையிலே இருக்கிற கொட்டாங்குச்சி எவ்வளவு? இதை வைத்துக்கொண்டு அதை எப்படி இறைக்க முடியும்?"என்று கேட்டார்!

அந்தப் பையன் சொன்னான்

"நீங்க எவ்வளவு?இந்த இயற்கை எவ்வளவு? உங்கள் மூளை எவ்வளவு? இதை வைத்துக்கொண்டு அதை அளந்திட முடியும் என்றால் நான் இந்த கொட்டாங்குச்சியை வைத்துக்கொண்டு கடல் தண்ணியை இறைத்திட முடியாதா?

நீங்களும் முயற்சி செய்யுங்க! நானும் முயற்சி செய்கிறேன்!" அப்படி என்று சொல்லி போட்டு ஓடிப் போய்விட்டான்!மறுபடியும் தண்ணி இறைக்க ஆரம்பித்திட்டான்! சாலமோன் ஞானிக்கு விடை கிடைத்துவிட்டது!

என்ன விடை கிடைத்தது? மனிதன் தன் மூளையைக் கொண்டு இயற்கையின் செயல்களை அளக்க முயற்சிக்கிறது கொட்டாங்குச்சியைக் கொண்டு கடல் தண்ணியை இறைக்கிறதுக்கு முயற்சி செய்கிற மாதிரி!

ஞானிக்கு ஐயம் மறைந்தது!அதே விநாடி சிறுவனும் மறைந்திட்டான். இதிலிருந்து என்ன தெரியுது? இயற்கையோட பல செயல்களுக்கு மனிதனாலே இன்னமும் அர்த்தம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு சின்ன உதாரணம்! நமது ஊரில் ஒரு ஞானி இருந்தார். அவரிடம் ஒருத்தன் வந்து கேட்டான் "ஐயா...எனக்கு புத்திர பாக்கியமே இல்லை! ஏதாவது வழி சொல்லுங்கள்" என்றார்.

அதற்கு அவர் சொன்னார்ர் "இராமேஸ்வரத்துக்குப் போய்விட்டு வா...குழந்தை பிறக்கும் என்றார்!"

இதற்கு அவன் "என் சொந்த ஊரே இராமேஸ்வரம்தான்" என்றான்.

# காரைநகர் பிரதேச சபை

## பொது அறிவித்தல் –2019

பின்வரும் அறிவித்தல்கள் 01.01.2019 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

**01.** பட வரைஞராகப் பதிவு செய்தல்

2019 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகள், புதுப்பித்தல்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2019

இப்பிரதேச எல்லைக்குள் நிரந்தர வியாபாரம் செய்வோர், நடமாடும் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை வடக்கு, தெற்கு ஆகிய உப அலுவலகங்களில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அப்பகுதி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக்கொள்ளவும். 31.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**02.** சூழல் பாதுகாப்பு உரிமம் **(EPL - 2019)**

இப்பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார / தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 31.01.2019 இற்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெறத் தவறுபவர்கள் 2019 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார / தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**03.** துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம்

மேற்படி துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2019.03.31 ஆம் திகதிக்கு முன் அப்பகுதி உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2019 ஆம் ஆண்டிற்கான வாகன, மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**04.** வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், அமைத்தலும், புதுப்பித்தல்/திருத்த வேலைகள் செய்தலும்

4.1 எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு - 268 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்பத்திரங்களை அப்பகுதி உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு முன் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

4.2 ஏற்கனவே அனுமதி பெற்று ஒருவருட காலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகாதவிடத்து அவ்விண்ணப்பதாரிகள் அனுமதியினைப் புதுப்பித்துக்கொள்வதோடு கட்டடத்தை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறியத்தருகின்றேன்.

4.3 சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள், கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும் என அறியத்தருகின்றேன்.

4.4 அனுமதியற்ற கட்டடங்களுக்கு பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும்.

| தொ. இல | அனுமதியற்று கட்டப்பட்ட கட்டட விபரம் | வதிவிடம் (குடியிருப்பு) ஒரு சதுர மீற்றருக்கு | வர்த்தக மற்றும் ஏனைய தேவைக்கான கட்டடங்கள் ஒரு சதுர மீற்றருக்கு |
|---|---|---|---|
| 01 | அத்திவார வேலை மட்டும் பூர்த்தி (தூண் பீட மட்டம்) | ரூபா 5.00 | ரூபா 10.00 |
| 02 | கூரை மட்டம் வரை (கூரை நீங்கலாக) | ரூபா 10.00 | ரூபா 15.00 |
| 03 | கூரை உட்பட நிர்மாணம் | ரூபா 15.00 | ரூபா 20.00 |
| 04 | நிர்மாணம் பூர்த்தி செய்யப்படல் | ரூபா 20.00 | ரூபா 25.00 |
| 05 | எல்லைச்சுவர் (மதில்)/அணைச்சுவர் நிறுவுதல் (நீளஅடிக்கு) | ரூபா 5.00 | ரூபா 5.00 |
| 06 | தொலைத் தொடர்பு மற்றும் வானலை வாங்கிக் கோபுரங்களை நிறுவுதல் | உயரத்தில் ஒவ்வொரு 5 மீற்றருக்கும் ரூபா 10,000.00 | |

**05.** வீதி ஒழுங்கைப் பேணல்

காரைநகர் நகர மையப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்து காரணமாக, விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

**06.** விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இரு மருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும்/ காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 31.01.2019 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/ நிறுவனங்கள் /வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 31.03.2019 ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

கட்டண விபரம் பின்வருமாறு

| தொ. இல | விபரம் | ஒளியூட்டப் பட்டது | ஒளியூட்டப் படாதது | துணி (1 சதுர அடி) |
|---|---|---|---|---|
| 01 | தனியார் வளவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் பிரசார பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 | ரூபா 25.00 |
| 02 | பிரதான பாதைக்கு தெரியக் கூடிய விதத்தில் உள்ள இடத்தைப் பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 | ரூபா 30.00 |
| 03 | உள்ளூராட்சி மன்றங்களின் வளவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 | ரூபா 50.00 |

**07.** பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்

காரைநகர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

08.அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் காணிகள் தொடர்பான அறிவித்தல்

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்பட வேண்டும். தவறின் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

09.உணவு கையாளும் நிலையங்கள் தொடர்பான அறிவித்தல்

உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

10.தரகர் முறை நீக்கல்

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

11. நீர் வழங்கல் சேவை

பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்விற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

12. உழவியந்திரம், உருளை, பக்கோ சேவை

பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் தமது தேவையின் பொருட்டு உருளை, பக்கோ சேவையினைப் பெறுவதற்கு பிரதேச சபையின் உப அலுவலகங்களில் கட்டணங்களை செலுத்தி சேவையினை பெற்றுக் கொள்ளலாம் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

13. கட்டாக்காலி கால்நடைகள் (ஆடு,மாடு)

பொதுமக்கள் தமது கால்நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மீறும் சந்தர்ப்பத்தில் பிரதேச சபையால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்செய்வோர் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**02.01.2019**

**திரு.விஜயதர்மா கேதீஸ்வரதாஸ்**
**தவிசாளர், பிரதேச சபை காரைநகர்.**

(C-4984)

## க.பொ.த.உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள்-2018

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை கணிதப்பிரிவு**

ரி.சஜீபன்-3ஏ, வி.சங்கீத்-2ஏபி, எஸ்.லிங்கேஸ்வரன்-ஏபிசி, ஏ.சிவாம்சன்-ஏ2சி, பி.யுவராஜ்-பி2சி, ரி.வஜீதரன்-பிசிஎஸ், ரி.சரண்ராஜ்-பிசிஎஸ், கே.விேனாஜன்-3சி.

விஞ்ஞானப்பிரிவு

கே.துளஷிகன்-3பி, எல்.விக்னேஸ்-பி2சி, வி.சேஷகி-3சி, எஸ்.திலக்ஷனா-3சி.

வர்த்தகப்பிரிவு

எஸ்.சுஜீவன்-ஏ2பி, எஸ்.டிலோஜன்-ஏ2பி, எம்.சுஜீபன்-2ஏசி, எஸ்.சனார்த்தனா-ஏபிசி, எஸ்.சசிதரன்-ஏபிசி, யு.கபியங்கா-3பி.

பொறியியற் தொழில்நுட்பவியல் பிரிவு

எஸ்.விதுஷன்-ஏபிசி, எஸ்.சங்கவி-3பி, எஸ்.ஐங்கரன்-2பிசி, என்.ததுர்ஷனி-பி2சி, எஸ்.குகசீலன்-3சி, கே.ஹரிராஜ்-2சிஎஸ்.

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பிரிவு

ஜி.டனிடில்ச்சனா-சி2எஸ், எஸ்.சஜீபனா-சி2எஸ், ஜே.பிரியந்தன்-சி2எஸ்.

கலைப்பிரிவு

சி.ஜெனனி-3ஏ, கே.கனிஸ்டன்-2ஏபி, ஏ.கீர்த்திகா-2ஏபி, ஆர்.தேனுகா-2ஏபி, ரி.தர்ஷிகா-2ஏபி, கே.சிவவிக்னேஸ்வரலிங்கம் செட்டியார்-2ஏபி, எஸ்.ரம்மியா-2ஏசி, எஸ்.தனுஜா-2ஏஎஸ், எஸ்.அனிஸ்ராஜ்-ஏ2பி, ரி.இளநிலா-ஏ2பி, ரி.தனுஜா-ஏபிசி, எஸ்.கஜனினி-ஏபிசி, எஸ்.சோபனா-ஏபிசி, ஜே.டிபினியா-ஏபிசி, ரி.துஸ்யந்தன்-ஏபிசி, ரி.விதுர்சன்-ஏ2சி, ஈ.ராஜி-ஏ2சி, எம்.தனுஜா-3பி, ரி.தயுஸ்ரன்-2பிசி, பி.பானுஜா-2பிசி, ரி.சபிர்ராஜ்-2பிசி, ஆர்.கோவலன்-2பிசி, ஜெ.தன்சிகா-2பிசி, ரி.மேரிஜமேலா-2பிசி, கே.சர்மிகா-2பிசி, ஏ.துன்ஷியா-2பிசி, எஸ்.கோபிகா-2பிஎஸ்.

**யாழ்.வட்டு மத்திய கல்லூரி கலைப்பிரிவு**

ம.சோமபாலன்-2ஏபி, ச.பிரகாஸ்-ஏபிசி, க.கபில்ராஜ்-சி2எஸ், இ.கஜேந்தினி-3எஸ்.


வணிகப்பிரிவு

ம.சாளினி-3பி, ம.திவ்யா-2பிசி, ஜெ.நிரூபா-பி2சி, சி.அருட்குமரன்-பி2சி, ந.ஐங்கரன்-சி2எஸ், சி.ஜதுசா-3எஸ், ர.அர்ச்சனா-3எஸ்.

**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**

கலைத்துறை

க.அனிஸ்ரலா-ஏபிசி, பி.லிவேகா-ஏபிசி, செ.தனுசா-ஏபிசி, சு.அஜித்-ஏபிசி, சு.சுஜித்-2பிசி.



# பாலிதீவு- பயணத்தின் அனுபவம்

14

சோ.நிக்கஜ்
அரியாலை.



நாங்கள் Trita Ganga water palace இலிருந்து கிளம்பி அடுத்ததாக சென்ற இடம். Ujung water place. இங்கு பார்ப்பதற்கென்று பெரிதாக இடங்கள் ஏதுமில்லை.

1909 ஆம் ஆண்டளவில் கட்டப்பட்ட இவ்விடம் உண்மையில் ஒரு அரண்மனையாகும்.

பின்னைய நாட்களில் இதனை பூங்காவாக மாற்றியிருக்கிறார்கள். நுழைவுக்கட்டணமாக 50,000 IDR வசூலித்தார்கள்.

கொஞ்சம் அதிகம் போல தான்இருந்தது. அதை வாய்விட்டு சாரதியிடம் திரும்பும் போது சொல்லி விட்டோம். அதற்கு அவர் இப்போதும் இங்கு ராஜா வசிக்கிறார் அதனால் தான் அந்தக்கட்டணம் என்றார்.

அங்கிருந்து கிளம்பும் போது மாலையாகவிட்டது. அடுத்ததாக virgin beach ற்கு அழைத்துச் செல்வதாக கூறினார்.

நாங்களும் கவலை வேண்டாம். அங்கு அதிக நேரம் செலவிடமாட்டோம் என்று சொல்லி வைத்தோம். ஆள் அரவம் ஏதும் இல்லாமல் ஒரு ஒதுக்குப்புறமாக இருப்பதனால் தான் இந்த கடற்கரைக்கு virgin beach என பெயர் வந்ததாக கூறினார்.

ஆனால் தற்சமயம் மெல்ல மெல்ல பிரபல்யம் அடைந்து வருவதையும் கூறினார். அழகாய் இருந்தாலும் ஜெல்லி மீன்களின் தொல்லை இருப்பதனால் இக்கடற்கரையில் குளிப்பது என்பது கேள்விக் குறிதான்.

நாங்கள் மீள விடுதிக்கு திரும்பிய போது நேரம் கிட்டத்தட்ட எட்டுமணியை தாண்டி விட்டது. உண்மையில் நாங்கள் பேரம் பேசிய 550,000 IDR என் பது மிக மிக இலாபகரமானது என்பதை உணர்ந்து கொண்டோம்.

ஆரம்பத்தில் பாலிக்கு வந்து இறங்கிய போது எட்டு நாட்கள் இருக்கிறது தானே என்ற நினைப்புடன் இருந்தோம். இப்போது கண்ணை மூடித்திறப்பதற்குள் அத்தனை நாட்களும் பறந்து விட்டது போல இருந்தது. பாலியின் அத்தனை இடங்களையும்பார்த்தோமா! என கேட்டால் எங்கள் பதில் இல்லை என்பது தான். Monky forest, Bertan temple, Balisa fari.. என தவற விட இடங்களின்பட்டியலும்இருக்கத் தான் செய்கிறது. நவம்பர் 19ஆம் திகதி இரவில் பாலி மண்ணில் கால் பதித்த நாங்கள் நவம்பர் 28 மதியமளவில் இலங்கை திரும்புவதற்கான விமானத்தில் ஏறினோம்.

கிட்டத்தட்ட பத்து நாட்கள் செலவிட்ட எங்கள் சுற்றுப் பயணத்திற்கு ஒரு நபருக்கு ஆன செலவு 100, 000 இலங்கை ரூபாய்களாகும் (5 நபர்கள்) (1USD- 175 SLR ற்கு கொள்வனவு செய்திருந்தோம். USD மீதான இலங்கை ரூபாயின் தேய்வு உங்களின் செலவை அதிகமாக்கலாம்).

அதாவது விமானச்சீட்டு, தங்குமிடம், உணவு, சுற்றுலா என்பவற்றுக்கான செலவு அவ்வளவு தான் வெளிநாட்டுப் பயணம் ஒன்றிற்கான விருப்பம் இருப்பின் இலகுவானதும் மலிவானதுமான தெரிவு பாலி.

நாங்கள் இலங்கைக்கு திரும்பிய போது நேரம் இரவு பதினொரு மணி. எந்தவிதமான பிரச்சினைகளுமின்றி திரும்பியதற்காக இறைவனுக்கு நன்றிகள் கூறிக்கொண்டோம்.

உங்களால் சுயமாக யாருடைய உதவியுமின்றி பாலி சென்று வருவதற்கு இந்தக்கட்டுரை உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். உங்களது பயணமும் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.


(முற்றும்)



இலங்கையிலிருந்து பாலித்தீவு நோக்கிச் சென்ற பஞ்சபாண்டவர்

# இலங்.-இந்திய மீனவர் விவகாரம்; உடனடி பேச்சுவார்த்தை அவசியம்

## ராமதாஸ் வலியுறுத்து



(சென்னை)

இந்திய மீனவர்களின் பாதுகாப்பு தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளரை இலங்கைக்கு அனுப்பி மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என இந்திய பாட்டாளி மக்கள் கட்சியின் ஸ்தாபகர் எஸ். ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கச்சதீவு கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்காக 500 படகுகளில் சென்ற சுமார் 3000 மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது கண்டிக்கத்தக்க விடயம் என்பதுடன், இத்தகைய செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இலங்கை கடற்படையினரின் தாக்குதல்கள் தொடருமாயின் இந்திய மீனவர்களால் தமது வாழ்வாதார தொழிலான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது போகும்.

எனவே இந்திய அரசாங்கம் வெளிவிவகார அமைச்சின் செயலாளரை இலங்கைக்கு அனுப்பி, இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்களை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு கச்சதீவை அண்மித்த பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகையில் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# முப்பது அடி பள்ளத்தில் லொறி வீழ்ந்து விபத்து



கண்டியிலிருந்து பொகவந்தலாவ நோக்கி பயணித்த லொறியொன்று 30 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் லொறியின் சாரதி படுகாயமடைந்துள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அட்டன் பொகவந்தலாவ பிரதான வீதியின் நோர்வூட் கிளங்கன் பகுதியிலேயே நேற்று அதிகாலை குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

கண்டியிலிருந்து பொகவந்தலாவ சென்ஜோன் டிலரி பகுதிக்கு விற்பனை செய்வதற்காக கோழிகளை ஏற்றி வந்த லொறியொன்றே வேகக் கட்டுப்பாட்டையிழந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த லொறியில்இரண்டு பேர் பயணித்ததாகவும் சம்பவத்தில் சாரதி படுகாயங்களுக்குள்ளான' நிலையில் டிக்கோயா கிளங்கன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# யானை மீது துப்பாக்கிச் சூடு உயிருக்கு போராடும் அவலம்

(புத்தளம்)

புத்தளம்-எழுவன் குளம் - தப்போவ சரணாலயத்தில் யானையொன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வனவிலங்கு திணைக்களத்தின் வைத்தியர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான யானைக்கு சிகிச்சை வழங்கியுள்ள போதும், அதன் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.



குறித்தயானைமீதுமூன்று துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன.

வேட்டைக்காரர்களால் இந்த துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றிருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனினும் தப்போவ சரணாலயத்தில்வாழும்யானைகள் தமது பகுதிகளுக்கு வந்து சேதம் விளைவிப்பதாக புத்தளம் - எழுவன் குளம், ரால்மடுவ பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

135

கோ அஜுற்றருக்கு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் மேல் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசம் மீது அதிகாரம் இருந்தது. யாழ்ப்பாணம் குருசபை வடக்கு, கிழக்கு, வடமேல், வடமத்திய மாகாணங்களைக் கொண்டிருந்தது.

இது ஏறத்தாழ 13,545 சதுர மைல்களாகும். பிதா பெற்றாச்சினி முதலாவது விக்கார் அப்போறிரிக்காக யாழ்ப்பாணம் வந்தபோது அந்த குருசபையில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் கத்தோலிக்கர் இருந்தனர். அவர் ஜுன் 1846 இல் யாழ்ப்பாணம் வந்தபோது ஆண்களுக்கொன்று பெண்களுக்கொன்று என இரு ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவினார்.

மேலும் சிறந்த பாடசாலைகள் பல தேவையாக இருந்தன. மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மிஷனரிமார் பற்றாக்குறை இருந்தது. ஆயினும் பெற்றாச்சினியின் காலத்தில் திருச்சபை கணிசமான வளர்ச்சி பெற்றது எனப் பின்வரும் குறிப்பு உணர்த்தியது.

சுவிசேஷ ஊழியர் அதிகரித்துள்ளனர். முன்னரைவிட அதிகமாகத் திருப்பலி கொடுக்கப்படுகின்றது. நோயாளர் பரிவுடன் கவனிக்கப்படுகின்றனர். மிஷனரிமார் ஒழுங்காக ஆலயத்துக்கு வருகை தருகின்றனர். பல ஆலயங்கள் கட்டப்பட்டும் திருத்தப்பட்டும் உள்ளன.

கத்தோலிக்க திருச்சபை இலங்கையில் அதுவும் குறிப்பாக தமிழரைப் பொறுத்த வரையில் ஒரு புதிய சகாப்தத்தினுள் பிரவேசித்தது. ஆயினும் தீபகற்பத்து தமிழர் மத்தியில் மட்டுமே மிஷனரிச் செயற்பாடுகள் நடைபெற்றன போல் தோன்றுகின்றது.

பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலத்தில் இத்தகைய தீவிர கத்தோலிக்க நடவடிக்கைகள் வேறெந்தத் தமிழ்ப் பிரதேசத்திலும் நிகழ்ந்ததாகச் சான்றுகள் இல்லை.

ஆயினும் மன்னாரில் பள்ளிமுனையில் மிஷனரிமார் நிலைகொண்டு மாதோட்டையின் மத்தியில் உள்ள பரப்பாங்கண்டலில் உள்ள ஒரு பாதிரியாரின் ஆதரவைப் பெற்றிருந்திருக்கின்றார்கள் எனத் தெரிகிறது.

ஆயினும் கத்தோலிக்க ஆலயங்கள் இருந்தமைக்கும் கிறிஸ்தவம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட்டதற்கும் சான்றுகள் எதுவும் இல்லை. 1850 வரை இந்த இடங்களிலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் எந்த நடவடிக்கையும் நிகழவில்லை.

கத்தோலிக்க மிஷன் இந்தக் காலகட்டத்தில் பல்வேறு தடைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. புரட்டஸ்தாந்து மதத்தினர் மத்தியில் வலுவான கத்தோலிக்க எதிர்ப்பு உணர்வுகள் நிலவின. இலங்கையரைக் கிறிஸ்தவராக்குவதற்கு இரு குழுக்களும் இணைந்து செயலாற்றுவதை விடுத்து இவை ஒன்றையொன்று கசப்புடன் எதிர்த்தன.

இவை ஒவ்வொன்றும் தனது கிறிஸ்தவப் பிரிவே உயர்ந்தது எனக் கருதியதுடன் சைவமக்களை எவ்வாறு தமது மதத்திற்கு மாற்ற முயன்றனரோ அதேயளவு முனைப்புடன் மற்றைய குழுவினரையும் தமது பிரிவுக்கு மாற்றப் பாடுபட்டனர்.

உண்மையில் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து என்ற பதங்கள் அஞ்ஞானி அல்லது புற மதத்தினன் என்ற சொற்களை விட அதிக வெறுப்புடன் பேசப்பட்டன. இப்பிரிவுகள் சைவ, பௌத்த மக்களை வெறுப்பதைவிடத் தம்முள் நிச்சயமாக ஒன்றையொன்று அதிகமான அளவு வெறுத்தன.

புரட்டஸ்தாந்தினருக்கு வழங்கப்பட்டிருந்த பாரபட்சமான சலுகைகள் உத்தியோகபூர்வமாக பிரித்தானியரால் கைவிடப்பட்டிருந்தது. ஆயினும் நல்ல எண்ணமொன்று செயற்படுத்தப்படாமற் போனமைக்கு இது ஒரு சிறந்த உதாரணமாக இருந்தது.

இப்போதும் கிறிஸ்தவ மக்களில் பெரும்பங்கினர் கத்தோலிக்கர்கள்தான் என்ற உண்மை மறைக்கப்படமுடியாதது. புரட்டஸ்தாந்தினரின் மதம் மாற்று முயற்சிகளின் இலக்காகக் கத்தோலிக்க சமூகம் இருந்தது. பிப்பிஸ்ற் (Papist) என்ற சொல் அஞ்ஞானி, புற மதத்தினன் என்ற சொற்களைப் போன்றே வெறுப்புக்குரியதாக இருந்தது.

றோமன் கத்தோலிக்கத்துக்கு எதிரான டச்சுச் சட்டங்கள் தளர்த்தியமையும் தனிப்பட்ட சில இலங்கைத் தேசாதிபதிகளினால் றோமன் கத்தோலிக்கத்துக்குக் காட்டப்பட்ட தாராள மனப்பான்மையும் கத்தோலிக்க எதிர்ப்புணர்வை நிலையாகவும் பயனுள்ள வகையிலும் குறைக்கவில்லை.

பிரித்தானியாவில் மிக வலிமையான அம்சமாக இருந்த கத்தோலிக்க எதிர்ப்புணர்வு, அதன் குடியேற்ற நாடுகளிலும் எதிரொலித்தது. இலங்கையைப் பொறுத்தமட்டில் கத்தோலிக்கருக்கு எதிரான பகைமையும் பாரபட்சமும் பிரித்தானிய அதிகாரிகள் மத்தியில் பரவியிருந்தது என்பதில் சந்தேகமேயில்லை.

இருப்பினும் டச்சு, பிரித்தானிய ஆட்சியினின் கீழ் பல வகையாக கட்டுப்பாடுகளை அனுபவித்திருந்த கத்தோலிக்கத் திருச்சபை எதிர்ப்பு மனப்பான்மை கொண்டு புரட்டஸ்தாந்து மதத்தின் அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் கத்தோலிக்கரைக் காப்பாற்ற முயற்சி செய்தது.

பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்கத்தை மீள நிறுவும் ஆரம்ப முயற்சிகள் தமிழரில் எவ்வகையான பாதிப்பையும் ஏற்படுத்தியதாகத் தோன்றவில்லை. பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரையிறுதிக் காலத்திற்கூட குடியேற்ற அரசின் ஆதரவுடன் தமது பணியை ஆரம்பித்த புரட்டஸ்தாந்தினரைவிட கத்தோலிக்க மிஷனரிமாரின் பணி குறைவான பலனையே அளித்தது.

### தமிழ்ப் பிரதேசங்களில் புரட்டஸ்தாந்து மதத்தினர்

இலங்கையில் பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலப் பகுதியின்போது புரட்டஸ்தாந்து மதம் நிறுவப்பட்டமை பற்றி ஆராயலாம். குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் முதலில் மதச் செயற்பாடுகளையும் இரண்டாவதாகக் கல்விச் செயற்பாடுகளையும் அவர்கள் எவ்வாறு மேற்கொண்டனர் என்பதை அவதானிக்கலாம்.

(தொடரும்)




“கோ அஜுற்றருக்கு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் மேல் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசம் மீது அதிகாரம் இரு ந்தது. யாழ்ப்பாணம் குருசபை வடக்கு, கிழக்கு, வடமேல், வடமத்திய மாகாணங்களைக் கொண்டிருந்தது. இது ஏறத்தாழ 13,545 சதுர மைல்களாகும். பிதா பெற்றாச்சினி முதலாவது விக்கார் அப்போறிரிக்காக யாழ்ப்பாணம் வந்தபோது அந்த குரு சபையில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் கத்தோலிக்கர் இருந்தனர். அவர் ஜுன் 1846 இல் யாழ்ப்பாணம் வந்தபோதுஆண்களுக்கொன்றுபெண்களுக்கொன்று என இரு ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவினார்”

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

# தளராது தொடர்ந்து போராடுங்கள் இலங்கையின் வீரர் நீங்களே

## மியன்மார் அஷின் விராது தேரர் ஞானசார தேரருக்கு செய்தி





(கொழும்பு)

தேசிய ரீதியான நோக்கம் ஒன்றுக்காக நீங்கள் உங்களது வாழ்க்கையையும் சுதந்திரத்தையும் ஆபத்தான நிலைக்கு உட்படுத்தியமை குறித்துப் பெருமையடைய வேண்டும். சரியான விடயமொன்றிற்காக போராடுபவர் ஆரம்பத்தில் தவறிழைப்பவராகப் பார்க்கப்பட்டாலும் இறுதியில் அவரே வெற்றியடைவார். நீங்கள் தான் இலங்கையின் வீரர். மியன்மார் உங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது என மியன்மாரில் இயங்கும் 969 பௌத்த அமைப்பின் தலைவர் அஷின் விராது தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு அனுப்பியுள்ள செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஞானசாரருக்கு அனுப்பியுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எங்களுடைய நண்பர் ஞானசார தேரருக்கு ஒரு செய்தியைக் கூற விரும்புகின்றேன். தேசிய ரீதியான நோக்கம் ஒன்றுக்காக நீங்கள் உங்களது வாழ்க்கையையும் சுதந்திரத்தையும் ஆபத்தான நிலைக்கு உட்படுத்தியமை குறித்துப் பெருமையடைய வேண்டும். நாங்களும் எமது வாழ்வினை ஆபத்திற்குள் உட்படுத்தியிருக்கின்றோம்.

தமது வாழ்க்கையைத் தேசிய ரீதியான நலனுக்காக அர்ப்பணித்த அனைவரையும் மக்கள் நேசிப்பர். தேசிய வீரராகக் கருதி மதிப்பளிப்பர். ஆகையால் நீங்கள் சிறையில் இருப்பதையிட்டு கவலையடையத் தேவையில்லை. இவ்விடயத்திற்காக நீங்கள் பெருமை கொள்வதுடன், மகிழ்ச்சியடைய வேண்டும்.

உங்களது உடல் ஆரோக்கியம் தொடர்பில் கவனம் செலுத்துங்கள். உங்களது விரைவான விடுதலையை நாங்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஞானசார தேரருக்கு ஒரு நினைவுச் சின்னத்தையும் அனுப்பி வைத்துள்ள அஷின் விராது தேரர், அதில் "உங்களது உடல் நலன் தொடர்பில் கவனம் செலுத்துங்கள். மனம் தளராது தொடர்ந்து போராடுங்கள். நாங்கள் அனைவரும் விரைவில் உங்களைச் சந்திப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்" எனக் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# ஸ்திரமான அரசாங்கம் ஒன்று இன்னும் அமைக்கப்படவில்லை

## அஸாத் சாலி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு கிடைத்தாலும் ஸ்திரமான அரசாங்கம் ஒன்று இன்னும் அமைக்கப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இடம் பெற்றுவரும் முரண்பாடே இதற்கு காரணமாகும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் உறுதியான அரசாங்கம் ஒன்று இல்லாமல் இருக்கும்போதுதான் இனவாத சம்பவங்கள் இடம் பெற ஆரம்பிக்கின்றன. மாவனல்ல சம்பவமும் அரசியல் பின்னணியாகவே இருக்கும் என்று நினைக்கின்றோம். இதற்கு முன்னர் அளுத்கம, திகன, அம்பாறை மற்றும் ஜிந்தோட்ட சம்பவங்களுக்கு பின்னணியில் அரசியல் வாதிகள் இருந்துள்ளதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

அதனால் அளுத்கம உட்பட மாவனல்ல சம்பவம் வரை முறையான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும். அதற்காக அனைத்துக்கும்பொதுவான ஆணைக்குழு அமைப்பது தொடர்பாக நாங்கள் ஏனைய தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றோம். இன்னும் சில தினங்களில் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்ற பிரிட்டன் பிரஜை பரிதாபமாக பலி

(நோட்டன்)

நோட்டன்பிரிட்ஜ்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஷபான நீர்வீழ்ச்சியின் பாதுகாப்பற்ற பகுதியை பார்வையிட சென்ற வெளிநாட்டு பிரஜை ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் புதுவருடப் பிறப்பன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு மரணித்தவர் பிரித்தானியாவைச் சேர்ந்த 29 வயது இளைஞர் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் தனது வெளிநாட்டு நண்பர்களுடன் நோட்டன் பிரிட்ஜ் தெபடன் சமனெலிய தோட்டப் பகுதியில் நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்ற போது இடம் பெற்றுள்ளது.

மரணித்தவரின் உடல் கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1605

### டிசாதனா

நினைப்பது போல வாழ்க்கை எல்லோருக்கும் அமைந்துவிடுவதில்லை அழகாய் அமைந்த வாழ்க்கையைக் கூட சிலருக்கு வாழத் தெரிவது இல்லை



### அஸ்வந்த்

சிரித்தால் தீரும் சண்டைதான்... ஆனால் யார் முதலில் சிரிப்பது என்பதுதான் பிரச்சினை



### அன்வர்

பிறந்து விட்டோம் என்று வாழாதீர்கள்... இனிப் பிறக்கப் போவதில்லை என்று நினைத்து வாழுங்கள்



### விஸ்வப்பிரசாத்

நண்பனை நம்பு, துரோகியைக்கூட நம்பு. ஆனால் சொந்தத்தை நம்பாதே



### லிசா

முள்ளில் தான் வாழ்க்கை... ஆனாலும் அழகாய் சிரித்துக்கொண்டுதான் இருக்கிறது ரோஜா



### ஜீவா

எது வரைக்கும் வாழப்போறோம் என்று தெரியவில்லை.. ஆனால் வாழும் வரைக்கும் சிரிச்சுக்கிட்டே வாழ்ந்திடனும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புத்தாண்டுப் பலன்கள் -2019

## ஜென்ம ராகு செல்கிறது, நன்மைகள் தேடி வருகிறது!



எந்தக்காரியம் முடிய யாரை, எப்படி அணுகவேண்டும் என்ற நுணுக்கத்தை கற்று வைத்திருக்கும் கடக இராசி வாசகர்களே!

பிறக்கப் போகும் புத்தாண்டு பெருமைக்குரிய ஆண்டாக உங்களுக்கு அமையப் போகின்றது. ஆண்டின் தொடக்கத்தில் குருவின் அருட்பார்வை முழுமையாக உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே பணப் புழக்கம் நன்றாக இருக்கும். ஜென்மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால் வருடத் தொடக்கத்தில் சில தடுமாற்றங்கள் ஏற்பட்டாலும் அதை சரிசெய்து கொள்ளும் மனப்பக்குவம் உண்டு. கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது.

பிடிவாத குணம் உங்களுக்குப் பிறவியிலேயே உண்டு. கையை கடிக்கும் விவகாரங்களில் தலையிட மாட்டீர்கள்.

### புத்தாண்டின் தொடக்க நிலை

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியில் ராகு சஞ்சரிக்கி ன்றார். சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் வீடு மாற்றங்களும், இட மாற்றங்களும் உங்களுக்கு எதிர்பார்த்தபடியே அமையும். பணிபுரியும் இடத்தில் பல நாட்களாக பிரச்சினையை உருவாக்கிய சக ஊழியர்கள் இப் பொழுது இடம்மாறிச் செல்வர். வெளி நாடு செல்பவர்களுக்கு வெளிநாட்டு யோகம் கைகூடும். வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் வரவேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அதுவும் கைகூடும். தாயின் ஆரோக்கியம் சீராகும்.

5ஆம் இடத்தில் குரு அமர்ந்து உங்கள் இராசியைப் பார்ப்பதால் மனக் கவலையும் தீரும். பணக்கவலையும் தீரும்.

குரு இருக்கும் இடம் புத்திர ஸ்தானம் என்பதால் பிள்ளைகள் வழியில் சுப காரியப்பேச்சுகள் கைகூடும். உத்தியோகம் கிடைக்காத பிள்ளைகளுக்கு உத்தியோகம் கிடைத்து மகிழ்வீர்கள். அதன்மூலம் உதிரி வருமானங்களும் பெருகி உங்கள் தேவைகளைப் படிப்படியாக பூர்த்தி செய்து கொள்வீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த முறையான பங்கீடுகள் உங்களுக்கு கிடைக்கும். புத்தாண்டின் தொடக்கம் புதிய பாதையை அமைத்துக்கொடுக்கும்.

9 ஆம் இடத்தில் செவ்வாய் இருப்பது யோகம் தான். பரம்பரைச் சொத்துக்களால் நன்மை கிடைக்கும். முன்னோர்கள் கட்டி வைத்த முறையான ஆலயத் திருப்பணிகளை சீர் செய்ய வாய்ப்பு கைகூடிவரும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

6இல் சூரியன், புதன், சனி ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. மறைந்த புதன் நிறைந்த தன லாபத்தை கொடுக்கும். ஜென்ம ராகு, சப்தம கேது ஆதிக்கத்தால் ஏற்ற, இறக்கமான நிலை இல்லாமல், சீரான சிறப்பான நிலை அமைய, நாகசாந்திப் பரிகாரங்களை பெப்ரவரி 13ஆம் திகதிக்குள் செய்வது நல்லது. செய்ய இயலாதவர்கள் ஏப்ரல் 13ஆம் திகதிக்குள் முறையான வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

### ராகு-கேது பெயர்ச்சிக்காலம்

புத்தாண்டின் தொடக்கத்தில் ஜென்மத்தில் ராகுவும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். பெப்ரவரி 13ஆம் திகதி அவை பின்னோக்கிச் சென்று முன்னேற்றப் பாதையை கொடுக்கப் போகின்றது. அன்றைய தினம் 12ஆம் இடத்தில் ராகு, 6ஆம் இடத்தில் கேது சஞ்சரிக்கப் போகின்றார்கள். 12ஆம் இடத்து ராகுவால் பயணங்களில் பலன் கிடைக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் இடமாற்றம், இலாகா மாற்றம், வெளிநாட்டு யோகம், அதிக சம்பளத்துடன் கூடிய வேலை வாய்ப்பு போன்றவைகள் தானாக வந்து சேரும். அலைச்சல் அதிகமாக உள்ள இந்த நேரத்தில் ஆதாயமும் அதிகமாக கிடைக்கும். புனித யாத்திரைகளும், புண்ணிய நதிகளில் நீராடும் யோகமும் உண்டு. வெளிவட்டாரப் பழக்க வழக்கம் மீண்டும் விரிவடையும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்கும் முயற்சிகளில் மனதைச் செலுத்துவீர்கள். மக்கள் செல்வங்கள் மணமாலை சூடும் வாய்ப்புக்கு உகந்த நேரமாக இந்த நேரம் அமைகின்றது.

6இல் சஞ்சரிக்கும் கேதுவால் ஆரோக்கியப் பாதிப்புகள் ஏற்பட்டாலும், குரு வீட்டில் கேது சஞ்சரிப்பதால் அவை உடனுக்குடன் நிவர்த்தியாகும். அறுவை சிகிச்சையிலிருந்து தப்பித்துக்கொள்வீர்கள். அனுபவமிக்கவர்கள் மற்றும் ஆன்மீக குருவின் வழிகாட்டுதலின்படி வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ளலாம்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக்கொண்டு விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். அதற்குப் பங்கு சேர பால்ய நண்பர்களோ, பழகிய நண்பர்களோ முன்வருவார்கள். பொருளாதாரப் பற்றாக்குறையைப் போக்கிக் கொள்ளவும், நிலையான வருமானத்திற்கு வழிவகுத்துக்கொள்ளவும் கிரகங்கள் சாதகமாக விளங்கும் நேரம் இது.

### குருப்பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கம் முதல் உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், ஒக்டோபர் 28 ஆம் திகதி 6 ஆம் இடத்திற்கு செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குருபகவான். 6இற்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத சில நல்ல திருப்பங்கள் ஏற்படும். உறவினர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். மாற்று வைத்தியத்தால் உடல்நலம் சீராகும். பெரிய மனிதர்களின் அபிமானத்திற்கு ஆளாவீர்கள். தொழில் வர்த்தகத் துறையில் மிகுந்த முன்னேற்றமும், பிரபலமாகும் யோகமும் கிடைக்கலாம். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக உறவினர்கள் தொடுத்த வழக்கு சமரச நிலைக்கு வரலாம்.

குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதோடு தொழில் ஸ்தானத்திலும், பயண ஸ்தானத்திலும் பதிகின்றது. எனவே வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். தெய்வப்பிரார்த்தனைகளை நிறைவேற்றும் பொருட்டு தல யாத்திரைகளை மேற்கொள்வீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

வளமான எதிர்காலம் அமைய, வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும். ஒருசிலருக்கு மேலதிகாரிகளின் ஆதரவோடு நல்ல இடத்திற்கு இட மாறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். அதே நேரத்தில் நல்ல பணியாளர்கள் உங்களை விட்டு விலகவும் நேரிடும். நவீன வாகனங்களை வாங்கி மகிழும் யோகம் உண்டு.




### குருவின் அதிசாரமும், வக்கிரமும்

ஆண்டின் தொடக்கத்தில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் குரு அதிசாரமாக மார்ச் 13ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். இடையில் வக்கிரமாகவும் உலா வருகின்றார். அப்பொழுது எதிர்பாராத சில மாற்றங்கள் ஏற்படும். பணிபுரியும் இடத்தில் கவனமுடன் செயற்படுவது நல்லது.

உடலில் அடிக்கடி சோர்வு ஏற்படும். உயரதிகாரிகளின் நெருக்கடி நிலை அதிகரிக்கும். வீண் பழிகளுக்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. புதிய வேலை தேடுபவர்களுக்கு தகுதிக்கேற்ற பணி அமைவதில் தாமதம் உண்டாகலாம்.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

7.5.2019 முதல் 24.6.2019 வரை சனி, செவ்வாய் பார்வை காலமாகும். இக்காலத்தில் மிதுனச் செவ்வாயை தனுசு சனி பார்க்கின்றது. இக்காலத்தில் விரயங்கள் கொஞ்சம் அதிகமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் கை நழுவிச் செல்லலாம். வாகனப் பழுதுகளால் கவலை ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டாலும் கடைசி நேரத்தில் அது கிடைக்காமல் போகலாம். உத்தியோகத்தில் சக பணியாளர்களால் தொல்லை உண்டு. நீண்ட தூரப் பயணங்களை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.

5.6.2019 முதல் 29.6.2019 வரை ரிஷப சுக்கிரனை, விருச்சிக குரு பார்க்கின்றார். இக்காலத்தில் பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுகள் கைகூடலாம். தேர்வில் முதலிடம் பெற்று பிள்ளைகள் உங்களுக்கு பெருமை சேர்க்கலாம். பெற்றோர் வழியில் உங்களுக்கு ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். பிரபலஸ்தர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குவர். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்வர். நகை வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். அடகுவைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

அமாவாசை தோறும் முன்னோர் வழிபாட்டையும், பௌர்ணமி தோறும் கிரிவல வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது. வைத்தீஸ்வரன் கோவில் சென்று பஞ்ச அர்ச்சனைகள் செய்து வழிபட்டு வந்தால் நெஞ்சம் மகிழும் வாழ்க்கை அமையும்.

### சனியின் வக்கிர காலம்

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் பூராடம் நட்சத்திரக் காலில் சனி வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் நன்மை, தீமை இரண்டும் கலந்தே நடைபெறும். உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான். என்றாலும் சப்தமாதிபதியும் அல்லவா வக்கிரம் பெறுகின்றார். எனவே வாழ்க்கைத்துணை வழியே அடிக்கடி பிரச்சினைகள் வந்து அலைமோதும். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. மேலும் ஒருசிலர் பணியின் காரணமாக வெவ்வேறு இடங்களில் பிரிந்திருக்கவும் நேரிடலாம்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புத்தாண்டு பெப்ரவரி மாதத்திற்கு பிறகு பிரச்சினைகளிலிருந்து விடுபடும் ஆண்டாக அமையப்போகின்றது. வருடத்தொடக்கத்தில் ஜென்மத்தில் சஞ்சரிக்கும் ராகு பின்னோக்கிச் சென்று முன்னேற்றமான வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கப் போகின்றது. மேலும் குரு பார்வையாலும், குடும்ப முன்னேற்றம் கூடுதலாகவே இருக்கும். கணவன்- மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும். ஆடம்பரப் பொருட்களையும், ஆபரணங்களையும் வாங்கி அணிந்து அழகு பார்ப்பீர்கள். பிள்ளைகளின் மங்கல நிகழ்ச்சிகள் குறிப்பிட்டபடி நடைபெறும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். தாய்வழி ஆதரவும், சகோதர வழி ஒத்துழைப்பும் கிடைக்கும். குருப் பெயர்ச்சிக்குப் பிறகு உடன்பிறப்புகளின் குணத்தில் மாற்றங்கள் ஏற்படலாம். உத்தியோக முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நல்ல பணி கிடைக்கும். பணிபுரிபவர்களுக்கு சம்பள உயர்வும், சந்தோஷமான தகவல்களும் வந்து சேரும். இனிய பலன்கள் நடைபெற சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்வதோடு குலதெய்வப் பிரார்த்தனைகளையும் நிறைவேற்றுவது நல்லது.

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

## புத்தளத்தில் மோதல் எட்டுப் பேர் படுகாயம்

(புத்தளம்)


புத்தளம்- தளுவ நுரைச்சோலைப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற மோதலில் எட்டு பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

'கிராமம் 80' என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் எட்டுப் பேர் கத்தி மற்றும் வாள் வெட்டுக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் மூவர் பெண்களாவர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு விரைந்த நுரைச்சோலை பொலிஸார், காயமடைந்தவர்களை புத்தளம் மற்றும் கற்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மோதலுக்கான காரணம் தொடர்பில் எவ்வித தகவலும் வெளியாகவில்லை. மேலதிக விசாரணைகளை நுரைச்சோலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)



யாழ். கட்டுவன் கரணடைக்குளம் ஸ்ரீ ஐயப்பன் கோவில் கொடியேற்றத்தின் போது..

## அரசியல் தலைமைத்துவம் கோரும் ஜனாதிபதி மைத்திரியின் சகோதரன்

(கொழும்பு)

ஜனாதிபதியின் மூத்த மகள் சத்துரிகா சிறிசேன உட்பட ஜனாதிபதியின் உறவினர்கள் சிலர் நேரடியாக அரசியலில் பிரவேசிக்க தயாராகி வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் சகோதரரான கோட்டீஸ்வர வர்த்தகர் டட்லி சிறிசேனவும் இதில் அடங்குவதாக கூறப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனிமைப்படுத்தப்படுவதை தவிர்க்கவும் கட்சிக்குள் அதிகாரத்தை வலுப்படுத்தும் நோக்கிலும் இவர்கள் அரசியலில் பிரவேசிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சத்துரிகா சிறிசேன ஏற்கனவே தனக்கான ஊடகப் பிரிவு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளதுடன் முகநூல் உட்பட சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி அரசியல் பிரவேசத்திற்கான சூழலை ஏற்படுத்தி வருகிறார். அத்துடன் டட்லி சிறிசேனவும் வெளிப்படையாக அரசியல் கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய டட்லி சிறிசேன, அரசியல் வாதிகளின் பணப் பேராசை காரணமாக நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கு எதிரான போராட்டத்திற்கு தலைமை தாங்க தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் தான் அறிந்த அரசியலுக்கு அமைய நாட்டை 9 துண்டுகளாகவும் 9 பிராந்தியங்களாகவும் பிரிக்கும் திட்டம் முன்னெடுக்கப்படலாம் எனவும் அதற்கு எதிரான போராட்டத்திற்கும் நாட்டுப் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் உயிர் அர்ப்பணியுடன் தலைமை தாங்கத் தயாராக இருப்பதாகவும் தனது இந்த கருத்து பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றாலும் தான் எந்தப் பிரச்சினைக்கும் பயந்த மனிதன் கிடையாது எனவும் டட்லி சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டு அரசியல் மற்றும் எதிர்வரும் தேர்தல் தொடர்பில் பல்வேறு சர்ச்சை செய்திகள் வெளிவரும் நிலையில் டட்லி சிறிசேனவின் இந்தக் கருத்து விரைவில் தேர்தல் நடத்தப்படுவதற்கான அறிகுறியாக கருதலாம் என அரசியல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## பொலிஸ் உடையில் ரங்கே பண்டார

(கொழும்பு)



பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார பொலிஸ் சீருடையில் எடுத்த புகைப்படங்களை தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

அரசியல் பிரவேசத்துக்கு முன்பு பாலித ரங்கே பண்டார பொலிஸ் அதிகாரியாக பணியாற்றியிருந்ததோடு உப பொலிஸ் அதிகாரியாக பதவி உயர்வு பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வருடம் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான ரங்கே பண்டார பெயரும் கூடுதலாக பேசப்பட்டிருந்தது.

மகிந்த ராஜபக்ஷ அணியினர் தன்னை 50 கோடி ரூபாவுக்கு பேரம் பேசியிருந்ததாக கையடக்கத் தொலைபேசி குரல் பதிவுகள் மூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

இந்த விடயம் தெற்கு அரசியலில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது. மேலும் பல சவால்களுக்கு மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் அட்சியமைத்துள்ளது.

இதில் பாலித ரங்கே பண்டாரவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவருக்கு எவ்வித அமைச்சுப் பதவியும் வழங்கியிருக்கவில்லை.

இந்நிலையில் தனக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படும் என எதிர்பார்த்தேன். ஆனால் வழங்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் எனக்கு கவலையளித்தாலும் மகிந்த அணியினருடன் ஒருபோதும் இணையமாட்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியிலேயே புதுவருடமான நேற்று முன்தினம் பொலிஸ் சீருடையில் புகைப்படங்களை எடுத்து தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார. (இ-7)

## புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற விடமாட்டோம்

### மகிந்த அணி எதிர்ப்பு

(கொழும்பு)



நாடாளுமன்றத்தில் இந்த ஆண்டு புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று மகிந்த ராஜபக்ஷ ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

"ஜேவிபி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன், புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒருபோதும் இடமளிக்காது.

புதிய அரசியலமைப்பு தேவையா, அல்லது அரசியலமைப்பில் திருத்தம் செய்ய வேண்டுமா என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். அரசியலமைப்பு மாற்றத்துக்கு, மக்களின் ஆணையை அரசாங்கம் பெற வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கடற்படைத் தளபதி



(கொழும்பு)

கடற்படையின் 23 ஆவது தளபதியாக, வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா நேற்று முன்தினம் பொறுப்பேற்றுள்ளார். கடற்படை தலைமையகத்தில் நடந்த நிகழ்வில் அவர் தனது கடமைகளை ஏற்றுக் கொண்டார்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற கடற்படைத் தளபதி அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க, கடற்படைத் தளபதிக்குரிய அதிகாரபூர்வ வாளை, வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவிடம் கையளித்தார்.

இதையடுத்து, அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவை வழியனுப்பும் நிகழ்வும், புதிய கடற்படைத் தளபதிக்கான வரவேற்பு மற்றும் பதவியேற்பு நிகழ்வும் இடம் பெற்றன. (இ-7)

## ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு ஈடேறும் வகையில் அரச ஊழியர்கள் சகலரும் செயற்பட வேண்டும்

### செயலாளர் செனவிரத்ன அறிவுரை

(கொழும்பு)

பொதுமக்களின் அபிலாஷைகள் நிறைவேறும் உன்னத தேசம் பற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எதிர்பார்ப்பை ஈடேறச் செய்வதற்கு அனைத்து அரச ஊழியர்களும் புத்தாண்டில் தமக்கான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன தெரிவித்தார்.

பிறந்திருக்கும் புத்தாண்டின் கடமைகளை ஆரம்பிக்கும் வகையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி செயலக ஊழியர்கள் முன்னிலையில் உரையாற்றும் போதே ஜனாதிபதியின் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

புத்தாண்டை முன்னிட்டு அனைத்து அரச ஊழியர்களுக்கும் தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்த உதய ஆர்செனவிரத்ன கடந்த ஆண்டில் முகங்கொடுத்த சவால் நிறைந்த நிலைமைகளை நினைவிற்கொண்டு பிறந்திருக்கும் புத்தாண்டின் சவால்களைக் கூட்டாகவெற்றிகொள்ள வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

மக்களின் மனக்குறைகளைக் கேட்டறிந்து அவர்களது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு அரச ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

சிறந்த சேவையின் மூலம் அரச சேவையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு ஒன்றிணையுமாறும் செனவிரத்ன அனைத்து அரச ஊழியர்களிடமும் கேட்டுக் கொண்டார். (இ-7)



## தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நியமனத்தின் போது பாதிக்கப்ப. வடக்கு மாகாண தொண்டராசிரியர்களின் சேவையை உறுதிப்படுத்துவதற்காக கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட மஞ்சள் விண்ணப்பப்படிவத்தை (yellow form) உடனடியாகப் பூர்த்தி செய்து வழங்க வேண்டியிருப்பதால் தங்களது சேவைக்கால கடிதம் நேர்முகத்தேர்வு கடித பிரதி, கல்விச்சான்றிதழ், வரவுப் பதிவேடு என்பவற்றுடன் நாளை வெள்ளிக்கிழமை 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரிய குளம் புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறு வடக்கு மாகாண தொண்டராசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 200 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 300 | 300 | 400 |
| தக்காளி | 80 | 150 | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 40 | 40 |
| கோவா | 100 | 80 | 100 | 80 | 100 |
| கரட் | 120 | 200 | 140 | 120 | 160 |
| பூசணி | 50 | 50 | 40 | 40 | 60 |
| புடோல் | 80 | 140 | 100 | 70 | 100 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 55 | 120 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 140 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 90 | 65 | 80 |
| பாகற்காய் | 200 | 300 | 280 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 120 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 40 | 60 |
| பயற்றங்காய் | 150 | 200 | 220 | 150 | 140 |
| லீக்ஸ் | 180 | 140 | 160 | 140 | 200 |
| பீற்றூட் | 160 | 100 | 180 | 110 | 150 |
| கறிமிளகாய் | 250 | 250 | 250 | 210 | 300 |
| முருங்கைக்காய் | - | — | 1000 | — | 500 |
| போஞ்சி | 100 | 160 | 150 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | 160 | 120 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 40 | 40 | 60 |
| தேசிக்காய் | 200 | 300 | 280 | 140 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 45 | 35 | 20-40 |
| இராசவள்ளி | 180 | 160 | 180 | 170 | 180 |
| வெங்காயப்பூ | 200 | 400 | 340 | — | — |
| முள்ளங்கி | 600 | 80 | 120 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 70 | 80 | 110 | 50 |

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூட்டமைப்பின் நம்பிக்கை நிறைவேறாவிட்டால்...?

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராகக் கொண்டுவர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாகப் பாடுபட்டது. அதற்காக நீதிமன்ற வாசல் ஏறவும் கூட்டமைப்பு தயங்கவில்லை.

ஜனநாயகத்தை பாதுகாக்க நீதிமன்றம் சென்றோம் என்ற கூட்டமைப்பின் நியாயப்பாடுகள் ஏற்புடையதல்ல.

ஜனநாயக மீறல்கள் பல இடங்களில் நடந்துள்ளன. அதிலும் குறிப்பாக தமிழினத்துக்கு எதிராக நடந்த ஜனநாயக மீறல்கள், ஜனநாயக விரோதங்கள் ஏராளம்.

எனினும் அப்போதெல்லாம் கூட்டமைப்பு நீதிமன்றம் போகவில்லை. ஏன் இப்போது தமிழ் அரசியல்கைதிகள் விளக்கம், விசாரணை இன்றி நீண்ட நெடுங்காலமாக சிறைகளில் அடைபட்டு கிடக்கின்றனர். இருந்தும் அவர்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் இதுவரை இல்லை.

தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தால் மட்டும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கைதிகளைச் சென்று பார்வையிடுவர்.

அரசாங்கத்துடன் கதைத்து உங்கள் விடுதலையை வலியுறுத்துகின்றோம். உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள் என்று கேட்பர். அந்தளவோடு தமிழ் அரசியல்கைதிகளை கூட்டமைப்பு மறந்துபோகும்.

இந்த வழமையைத் தவிர, நீதிமன்றத்தை நாடி தமிழ் அரசியல் கைதிகளின் அவலத்துக்கு முடிவு கட்டலாமா என்ற பக்கத்தை திரும்பிப் பார்க்கக்கூட, கூட்டமைப்பு விரும்பியதில்லை.

நிலைமை இதுவாக இருப்பதால் ஜனநாயகத்தைப் பாதுகாக்க என்று கூட்டமைப்புக் கூறுவது ஏற்புடையதல்ல.

இதை நாம் கூறும்போது அப்படியானால் பாராளுமன்றக் கலைப்புக்கு எதிராக கூட்டமைப்பு நீதிமன்றத்தை நாடியதன் காரணம் என்ன என்ற கேள்வி எழும்.

இதற்குப் பதில் முதன்மைக் காரணிகள் இரண்டு எனக் கூறலாம்.

இதில் பாராளுமன்றத்தைக் கலைத்தால் பொதுத் தேர்தல் வரும். பொதுத் தேர்தல் வந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையான வீழ்ச்சியைச் சந்திக்கும்.

எனவே இப்போது பொதுத் தேர்தல் நடப்பது கூட்டமைப்புக்குப் பாதகமானது என்பதால், பாராளுமன்றக் கலைப்பை இல்லாமல் செய்வது அவசியமாகிறது.

தவிர, இரண்டாவது காரணம் ரணில் விக்கிரமசிங்க பிரதம்ராக வந்தால் தமிழர் தாயகத்தில் தங்களின் சில வேலைத்திட்டங்களைச் செய்ய முடியும்.

இஃது எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களின்போது கூட்டமைப்புக்குப் பாதுகாப்புக் கவசமாக இருக்கும் என்ற இரு காரணங்களை வைத்து கூட்டமைப்பு நீதிமன்றத்தை நாடியது.

இருந்தும் மேற்கூறப்பட்ட உண்மைக்காரணங்கள் வெளியில் சொல்லக் கூடியவை அல்ல. இந்தக் காரணங்கள் தமிழர் நலன் சாராமல் கட்சி நலன் சாா்ந்ததாக இருப்பதால், இந்த விளக்கங்களை தமிழ் மக்கள் ஏற்க மாட்டார்கள்.

அதனால் அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தோம் என்பது கூட்டமைப்பின் விளக்கமாக உள்ளது.

நல்லது, கூட்டமைப்புக் கூறும் விளக்கத்தில் ஏதோவொரு நியாயப்பாடு உண்டு. அதாவது புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் தமிழ் மக்களுக்கு முழுமையான தீர்வைத் தராவிட்டாலும் ஏதேனும் நன்மை தருமென்றால் அது அமுலாகட்டும் என்ற முடிவு தவறல்ல.

அந்த வகையில் புதிய அரசியலமைப்புக்காகவே ரணிலை ஆதரித்தோம் என்ற கூட்டமைப்பின் காரணத்தை ஏற்றுக் கொண்டால்,

புதிய அரசியலமைப்பு நிறைவேறவிட மாட்டோம் என்கிறது மகிந்த தரப்பு.

இங்குதான் கூட்டமைப்பின் நம்பிக்கை நிறைவேறாவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதுதான் எம்மிடம் ஏற்படும் வினா.

## “நீரால் சேதமடைந்த நூல்களைப் பாதுகாப்போம்”

வேகமாக அடித்துச் செல்லக் கூடிய சுத்தமான நீரை உபயோகித்து பாதிக்கப்பட்ட நூல் சாதனங்களை கழுவி சுத்தம் செய்து கொள்ளவும்.

சுத்திகரிக்கப்பட்ட நூல்களின் பக்கங்களுக்கிடையில் ஈரம் உறிஞ்சிக்கொள்ளும் வகையில் கடதாசியை (புளோடின் கடதாசி) உட்செலுத்தி நூலின் உட்பகுதியை உலர்த்திக் கொள்ளவும். (மின் விசிறி, கூந்தல் உலர்த்தி அல்லது இயற்கையாக வீசக் கூடிய காற்றை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்) படங்கள் அச்சிடப்பட்டுள்ள பக்கங்களுக்கிடையில் பொலிதீன் தாள் ஒன்றை இடுவதன் மூலம் தாள்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்வதை தடுத்துக் கொள்ளலாம்.

ஈரலிப்பிற்குட்பட்ட நூல் சாதனங்களை மூன்று நாட்களுககுள் முழுமையாக உலர்த்திக் கொள்ள வேண்டும்.

ஏதோவொரு காரணத்தினால் ஈரலிப்பிற்குட்பட்ட நூல்களை மூன்று நாட்களுககுள் உலர்த்திக் கொள்ள முடியவில்லையென்றால் பொலித்தீன் பையொன்றினுள் நூலை இட்டு (பொலித்தீன் பையினுள் காற்று உட்புகா வண்ணம்) குளிரூட்டியில் இடவும். பின்னர் சூரிய ஒளி பிரகாசம் கூடிய ஒரு நாளில் குளிரூட்டியிலிருந்து நூலை வெளியே எடுத்து மேற்கூறப்பட்ட முறையின்படி உலர்த்திக் கொள்ளவும்.

நூலினுள் பூஞ்சணம் பரவிக் காணப்படின் 7 வீத செறிவு கொண்டதாக எதனோலை பஞ்சுத் துண்டொன்றின் மீது தடவி நூலின் தாளில் காணப்படுகின்ற பூஞ்சணத்தை துடைத்து அகற்றி விடவும். இரசாயனப் பதார்த்தங்களை உபயோகிப்பது சாத்தியப்படாத சந்தர்ப்பத்தில் பூஞ்சணம் காணப்படுகின்ற நூலை 5-7 நிமிட கால அளவில் சூரிய ஒளிபடும் வகையில் திறந்து வைக்கவும். சூரிய ஒளியில் காணப்படுகின்ற அல்ட்ரா வயலட் கதிரானது பூஞ்சணம் அழிந்து போவதற்கு காரணமாக அமையும்.

சூரிய ஒளியானது நூல்களின் நீடித்த பாவனையைக் குறைப்பதால் இச்செயற்பாட்டை மிகவும் கவனமாக மேற்கொள்ள வேண்டும். நூலின் ஈரலிப்பு 90 சதவீதம் அளவில் அகன்றதன் பின்னர் ஈரலிப்பை உறிஞ்சிக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட கடதாசியை அகற்றி இரு உலோகத் தகடு (30x30cm)களுக்கிடையில் நூலை வைத்து 3-5 கிலோகிராமிற்கு அளவிலான அழுக்கத்தை ஏற்படுத்தவும். இதற்கான நிபின் பிரேஸ் உபகரணத்தை உபயோகிக்கலாம் என தேசிய நூலக ஆவணவாக்கல் சபை அறிவுறுத்தியுள்ளது. (இ)

## பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

2018 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் 167 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளது.

பெயர்ப்பட்டியலை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

புதிதாக அனுமதி பெறவுள்ள மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் 05.01.2019 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் தலைமையில் தம்பையா மண்டபத்தில் நடைபெறும். (இ)

## வ.பி.போக்குவரத்துச் சேவை வழமைபோல் இயங்கும்

### இரண்டு தொழிற்சங்கம் அறிவிப்பு

நாளை 4ஆம் திகதி வெளிக்கிழமை தொடக்கம் வட பிராந்திய போக்குவரத்து சேவைகளை பணிப்புறக்கணிப்புச் செய்யப் போவதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய இணைந்த தொழிற்சங்கம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் இணைந்த தொழிற்சங்கத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் நாளை 4ஆம் திகதி வட பிராந்திய போக்குவரத்துச் சேவைகள் வழமைபோல் நடைபெறுமென்றும் தேசிய ஊழியர் சங்கமும் சிறிலங்கா நித ஹாஸ் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம்-யாழ்.சாலையும் நேற்றைய தினம் வலம்புரிக்கு அனுப்பி வைத்த தனித்தனிக் கடிதங்களில் தெரிவித்துள்ளன. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில வவுனியா கிறிட்டிலிருந்து பொகஸ்வேவ வரை, CEC கல்லுடைக்கும் ஆலை, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில பறயனாலங்குளம், பெரிய குஞ்சுக்குளம், பெரியமுறிப்பு, திக்கம், மடுச்சந்தி, கட்டையடம்பன, மலவராயர் கட்டையடம்பன், தம்பனைக்குளம், பணணைவெட்டுவான், இசைமழைத்தாழ்வு, கற்கடந்தகுளம், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம், முருங்கனிலிருந்து உயிலங்குளம வரை, முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம் அரிப்பு சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

## கடும் குளிரில் உறைந்து போகும் தமிழர் தாயகம்!

(கொழும்பு)

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் மிகவும் குளிரான காலநிலை நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. விசேடமாக வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் மிகவும் குளிரான காலநிலை நிலவுவதாக திணைக்களம் நேற்று விடுத்துள்ள வானிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் மழையற்ற காலநிலை நிலவும். எனினும் இரத்தினபுரி மாவட்டத்தில் மழை பெய்யக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல் மற்றும் ஊவா மாகாணத்திலும் அம்பாறை, புத்தளம், கேகாலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடைக்கிடையே 40 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்திலும் இரத்தினபுரி மாவட்டத்தின சில பிரதேசங்களிலும் காலை நேரத்தில் பனிமூட்டத்துடனான காலநிலை நிலவும் என அந்த திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## வவுனியா வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்குகளில் 33 இலட்சத்து 79 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் அறவீடு

### மாவட்ட பொறுப்பதிகாரி நிலாந்தன் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் கடந்தாண்டு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்குகளில் 33 இலட்சத்து 79 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி எஸ். நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2018ஆம் ஆண்டில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் பல சுற்றிவளைப்புகளையும் சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர்.

அதனடிப்படையில் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை தவறிழைத்த 655 வியாபார நிலையங்கள், உற்பத்தி நிறுவனங்கள், கம்பனிகள், கம்பனி முகவர்கள் எமது குழுவினரால் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதுவரை 611 வழக்குகள் விசாரிக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தப்பட்டு அவற்றில் 595 வழக்குகள் விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து தண்டப் பணம் அறவிடப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்போது மொத்தமாக 33 இலட்சத்து 79 ஆயிரத்து 500 ரூபாய் நீதிமன்றத்தால் தண்டமாக அறவிடப்பட்டது.

குறிப்பாக வர்த்தகர்கள் காலாவதியான பொருட்கள் விற்பனை, விலை காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை செய்தல், கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடிய விலையில் பொருட்களை விற்பனை செய்தல், சுட்டுத்துண்டு இல்லாமல் அந்த லேபலில் போதிய விபரங்கள் இல்லாமல் பொருட்களை விற்பனை செய்தல், பாதுகாப்பு கருதி எஸ்எல்எஸ் சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்ட பொருட்களுக்கு பதிலாக அச்சான்றிதழ் அற்ற பொருட்களை விற்பனை செய்தல் போன்ற தவறுகளை மேற்கொண்டமையினாலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தவறிழைத்த வியாபாரிகளை இனங்கண்டு தண்டம் விதிப்பது மட்டுமின்றி வியாபாரிகளுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கும் முகமாக விழிப்புணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு மாவட்டத்தின் பல இடங்களில் நடத்தப்பட்டுள்ளது.

வியாபாரிகளுக்கு மட்டுமன்றி பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள் என பல தரப்பினருக்கும் பாவனையாளர் உரிமைகள், பாவனையாளர் கடமைகள், பாவனையாளர் சட்டங்கள் தொடர்பில் தெளிவூட்டும் முகமாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

வியாபாரிகளுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கும் முகமாக 36 விழிப்புணர்வு நிகழ்வுகளும் பாடசாலை மாணவர்களுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கும் முகமாக 33 விழிப்புணர்வு நிகழ்வுகளும் பொதுமக்களுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கும் முகமாக 3 விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (2-250)

# மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள்

## காபன் பரிசோதனைக்காக புளோரிடாவுக்கு இம்மாத இறுதியில் அனுப்புவதற்கு ஏற்பாடு



(மன்னார்)

மன்னார் மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைக்காக எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை புளோரிடாவிற்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அகழ்வுப் பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த 10 தினங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று புதன்கிழமை 122 ஆவது நாளாக அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அகழ்வுப் பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றைய தினம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றைய தினம் மனித எலும்புக்கூடுகள் அகழ்வு செய்யப்படவில்லை. கால நிலை மாற்றத்தினால் ஏற்பட்ட மழை காரணமாக அகழ்வு செய்யப்படும் பகுதி பாதிப்படைந்துள்ளது.

இந்த நிலையில் அவற்றை சீர்செய்து அகலப்படுத்தி அகழ்வு இடம்பெறும் பகுதியைச் சுற்றி மறைப்பு வேலி அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

நேற்றைய தினம் மன்னார் நீதவானுடன் கலந்துரையாடல் இடம் பெற்றது. குறிப்பாக அகழ்வு மேற்கொள்ளப்படும் பகுதிகளில் உள்ள வீதிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் பெற்றுக் கொள்ளப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைக்காக புளோரிடாவுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இதன் போது மரணம் தொடர்பிலும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்ள முடியும். மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என மேலும் தெரிவித்தார்.

தற்போது வரை 280 மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 274 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளில் 20 மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையது என நம்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-285)


**அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**
**இணுவில் - மருதனார்மடம், சுன்னாகம்.**

**இசை ஆராதனை**

**இன்று (03.01.2019) வியாழக்கிழமை (பகல் 11 மணி)**

**நாத சங்கமம்**

| | |
|---|---|
| புல்லாங்குழல் | - கு.நக்கீரன் |
| வயலின் | - ப.சியாம்மகிருஸ்ணா |
| பாட்டு | - ம.தயாபரன் |
| ஓர்கன் | - அ.ஜெகதீஸ் |
| மிருதங்கம் | - கிருபா அனந்தகோபன் |
| கெஞ்சிரா | - ஸ்ரீ.டிலுக்சன் |
| முகர்சிங் | - க.நந்தகுமார் |
| தபேலா | - வெ.பிரபாகர சர்மா |
| பாட்டு | - அ.கேதீஸ் |

அனுசரணை: கு.பிரகாஸ்,
இல.52, கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.
(சி-4827)


## புதிய வருடத்திலாவது சர்வதேசம் எங்கள் மீது கரிசனை கொள்ளட்டும்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கண்ணீர்



(பனிக்கன்குளம்)

புதிய வருடத்திலாவது சர்வதேச சமூகம் தம்மீது கரிசனை கொண்டு தமது உறவுகளை மீட்பதற்கு துணை நிற்கவேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்களே இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பல நாட்களாக நாம் எமது பிள்ளைகளை காண வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றோம். இலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் அனைவருமே எம்மை கைவிட்டு விட்டனர்.

எனவே நாம் தொடர்ச்சியாக சர்வதேசத்தையே தற்போது எதிர்பார்த்து நிற்கின்றோம். எனவே புதிய ஆண்டிலாவது சர்வதேசம் எம் மீது கரிசனை கொண்டு எமது பிள்ளைகளை காண ஆவன செய்து தரவேண்டும் என கண்ணீர் மல்க தெரிவித்தனர். (2-250-281)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி சிந்தாமணி



துன்னாலை வடக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி சிந்தாமணி அவர்கள் 02.01.2019 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மருமகளும், வேலுப்பிள்ளை கந்தசாமியின் அன்பு மனைவியும், அருந்தவராசா (கொலன்ட்), திருமதி விஜயகுமாரி - சுதாகர், காலம் சென்ற ஸ்ரீபாஸ்கரன் ஆகியோரின் அன்பு தாயாரும், கௌரி (கொலன்ட்), காலஞ்சென்ற தம்பித்துரை - சுதாகர் ஆகியோரின் அன்பு மாமியாரும், சொப்னா, சோபனா, ஆனந்த் (கொலன்ட்), சாதுர்ஜன் (கொலன்ட்), ஜெயானந்தன் (மருந்துக்கலவை உத்தியோகஸ்தர் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை), அகிலன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், சஞ்சய்குமார், சஜோனா, ஆதர்ஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2019) வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4998)

**துன்னாலை வடக்கு, கரவெட்டி. தகவல் : குடும்பத்தினர்**

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

கடந்த 04.12.2018
செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத்
தலைவி

**அமரர்**
**கௌசலா**
**இராகவன்**





அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (03.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியை நாம் இழந்து தவித்து நின்றவேளை எமக்கு ஆறுதல் தந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உதயசூரியன் வீதி,
உடுவில், சுன்னாகம். (சி-4988)

இங்ஙனம்
குடும்பத்தினர்

## புதிய அரசியல் அமைப்பு...

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய பாராளுமன்றின் இலங்கை நட்பு குழுவின் உறுப்பினருமான ஜெப்ரிவான் ஓர்டன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்று கொழும்பில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போதே பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கருத்தை ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் நிலவும் அரசியல் நிலைமை தொடர்பில் உறுப்பினரை தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன் அரசியலமைப்பு சபையின் மீள் நியமனத்தின் முக்கியத்துவத்தினை சுட்டிக்காட்டிய அதேவேளை இந்த அரசியலமைப்பு சபையின் மீள் நியமனத்தினால் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை பேணப்பட்டுள்ளமையானது கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் மூலம் நிரூபணமாகியுள்ளமையையும் எடுத்துக்காட்டினார்.

மேலும் பதிலளித்த இரா.சம்பந்தன், அரசாங்கத்தினை மீளக் கொண்டு வருவதற்கு நாம் வழங்கிய ஆதரவு கொள்கை அடிப்படையிலானதாகும் என்றும் நாடானது ஒரு பிரதமரோ அரசாங்கமோ இல்லாத ஒரு இக்கட்டான நிலைமையில் இருந்த போது நாட்டு பொருளாதாரத்திற்கும் நிறுவனங்களின் சுமுகமான செயற்பாடுகளுக்கும் ஏற்படவிருந்த பாதக விளைவுகளை தடுக்கும் முகமாகவே அரசாங்கத்தினை மீள கொண்டு வருவதற்கான ஆதரவினை கொடுத்ததாகவும் தெரிவித்தார்.

புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பில் தெளிவுபடுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் கடந்த டிசம்பர் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்ட வரைபு யாப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன்பாக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும்கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன், புதிய அரசியல் யாப்பானது நாடு ஒருமித்ததாகவும் பிரிக்கப்பட முடியாததாகவும் இருப்பதனை உறுதிசெய்யும் ஒன்றாக அமையும் அதே சந்தர்ப்பத்தில் மக்களும் பிராந்திய மாகாண அரசாங்கங்களும் தமது வாழ்வில் தொடர்புடைய அன்றாட விடயங்கள் தொடர்பில் அதிகாரங்களை பயன்படுத்தும் வகையிலான நேர்மையான ஒரு அதிகாரப் பகிர்வினையும். கொண்டிருக்க வேண்டும்எனவும் வலியுறுத்தினார்.

மேலும் ஒரு புதிய அரசியல் யாப்பு கொண்டு வரப்படுகின்ற போது அது நியாயமானதொன்றாக இருக்கும் பட்சத்தில் அதற்கு எமது மக்கள் தமது ஆதரவினை கொடுப்பார்கள் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டதிலிருந்து பதவிக்குவந்த ஒவ்வொரு தலைவர்களும் அரசியல் யாப்பில் முன்னேற்றத்தினை கொண்டு வருவதற்கு பல்வேறு கருமங்களை மேற்கொண்டுள்ளனர் என தெரிவித்த இரா.சம்பந்தன் ஜனாதிபதி பிரேமதாசவின் காலத்தில் மங்களமுன சிங்க அறிக்கை, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் 2000ஆம் ஆண்டு அறிக்கை, மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அனைத்து கட்சி தெரிவுக் குழு, மற்றும் பேராசிரியர் திஸ்ஸவிதாரணவின் அறிக்கை போன்றன அரசியல் யாப்பிற்கு அதிகளவு முன்னேற்றங்களை பரிந்துரைந்திருந்தன எனவும் தெரிவித்தார். கடந்த முப்பது வருடங்களாக பல்வேறு கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தற்போது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது இதனை நாட்டின் நன்மை கருதி நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் எனவும் இரா.சம்பந்தன் தெரிவித்தார். மேலும் நான் நியாயமாக நம்பிக்கைகொண்டுள்ளேன். ஏனெனில் இது எனது நாடு இந்தநாடு செழிப்படைய வேண்டும் என்பது எனது விருப்பம். எனவே என்னால் நம்பிக்கையற்றவனாக இருக்கமுடியாது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார். (ம)


# சேவை நயப்பு வாழ்த்து

## திரு.V.S.மாணிக்கராஜா

(பிரதிக் கல்விப் பணிப்பாளர் – நிர்வாகம்
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்)




**யாழ்.கல்வி வலயத்தில்...**

அதிபர், கோட்டக்கல்விப்
பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்
பாளர் எனப் பல்வகை ஆளுமையில்
பல்லாண்டுகள் நற்பணியாற்றி,
எல்லோர் மனங்களையும் ராஜாவாக
வசீகரித்து மணிவிழா நாளில்
பணிவோய்வு பெறும் நாயகன்

**திரு. V.S.மாணிக்கராஜா**

அவர்கள் நலமோடு வளமோடு
இறையருளோடு நீடு வாழ
வாழ்த்துகின்றோம்.

**கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள்,
அதிபர்கள், அலுவலர்கள்.**

(C-4986)

**யாழ்ப்பாணம் - நல்லூர் கல்விக் கோட்டங்கள்.**


## இராணுவத்...

இராணுவத்திலிருந்து தப்பியோடிய நபர் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் ரங்க திசாநாயக்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (ம)

## மோட்டார்...

போன்று வீட்டில் இருந்து தனது வியாபார நிலையத்தை திறப்பதற்காக அவர் நடந்து சென்றுள்ளார்.

வியாபார நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அவர் வீதியை கடக்க முற்பட்ட போது, யாழ்ப்பாணத்தில் இருந்து மானிப்பாய் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இதனால் வீதியில் இருந்து தூக்கி எறியப்பட்ட முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சம்பவ இடத்துக்கு வந்த யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம)

## புதிய அரசி...

குழு முயற்சித்து வருகின்றது. இவ்வாறு செய்வதற்குக் காரணம் இனவாதத்தை தூண்டி விடுவதாகும். அரசியலமைப்பொன்றைக் கொண்டுவருவதற்கு பல்வேறு கட்டங்கள் உள்ளன. அவற்றைக் கடக்காமல் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர முடியாது. இந்த அரசாங்கத்துக்கு அதனைக் கொண்டு வர பாராளுமன்றத்தில் முடியாது.

இது இவ்வாறிருக்கையில், பொய்யாக சமஷ்டி அரசியலமைப்பு, நாட்டைத் துண்டாட முயற்சி என மக்களிடம் அச்சமூட்டும் பிரசாரங்களை சிலர் முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போதைய பாராளுமன்றத்தினால் புதிய அரசியலமைப்பொன்றை நிறைவேற்றிக்கொள்ள முடியாது. புதிய அரசியலமைப்பொன்றை நிறைவேற்றி நாட்டை துண்டாடும் சதிகார நடவடிக்கைக்கு ஒரு போதும் ஆதரவு வழங்க மாட்டோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## அரசியல் பழிவாங்கலில்...

தில் நடைபெற்றது.

இதன்போது புத்தாண்டு வாழ்த்துகளை முதலில் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறிய உரையொன்றை நிகழ்த்தியுள்ளார்.

அமைச்சுகளுக்கான நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஒதுக்கப்பட்டுள்ள விதம் தொடர்பில் சில அமைச்சர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இது விடயத்தில் எவ்வித உள்நோக்கமும் கிடையாது. எந்தெந்த அமைச்சின்கீழ் எந்தெந்த அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் வர வேண்டும் என்ற பட்டியலை பிரதமர் தான் எனக்கு அனுப்பியிருக்க வேண்டும். அந்தப் பட்டியல் கிடைக்காத காரணத்தினாலேயே, புத்தாண்டில் அமைச்சுகள் இயங்க வேண்டும், மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்பதால் ஜனாதிபதி செயலக அதிகாரிகளின் உதவியு டன் விடயதானங்கள் ஒதுக்கப்பட் டன என்று ஜனாதிபதி தெரிவித் துள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள பிரதமர் வருட இறுதியில் உங்களுக்கு நிறைய வேலைகள் இருந்திருக்கும்.

அதைக் கருதித்தான் நான் அனுப்பவில்லை. என்று தெரிவித்து, புதிய பட்டியலையும் ஒப்படைத்துள்ளார்.

இதன்பிரகாரம் அதிருப்தியில் இருக்கும் அமைச்சர்களுக்கு விரைவில் நிவாரணம் கிடைக் கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## புதிய அரசமைப்பின் ஊடான...

மைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்று புதன்கிழமை கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பில் சுமந்திரன் எம்.பியும் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது பேசிய சுமந்திரன், தீவிரவாதப் போக்குடைய புலம்பெயர் சமூகத்தினர் மிக சிறிய எண்ணிக்கையிலேயே உள்ளனர். எனவே, இலங்கையில் புதிய அரசமைப்பின் ஊடாக நியாயமான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால் அதற்குப் பெரும்பான்மையான புலம்பெயர் சமூகத்தினர் தமது ஆதரவை வழங்குவார்கள் என்றார்.

இதேவேளை, கடும் போக்குடைய புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் நாம் எடுக்கும் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தாது என்று இந்தச் சந்திப்பின்போது இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் அத்தகைய கடும்போக்காளர்களை மக்கள் தோற்கடித்திருக்கின்றார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (ம)

## மார்ச் 05 இல்...

ரவைக் கூட்டத்தில் முன்வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கணக்கு அறிக்கையை எதிர்வரும் 8 ஆம் திகதி சமர்ப்பிப்பதற்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தயாராக இருந்ததாகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவி ஏற்பு நினைவுதினம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளதனால் அதற்கு முன்னர் இந்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நிதி அமைச்சரினால் முன்வைக்கப்பட திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நல்லிணக்கத்தை ஏற்படுத்த...

ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய பாராளுமன்றின் இலங்கை நட்பு குழுவின் உறுப்பினருமான ஜெப்ரிவான் ஓர்டன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரனை நேற்று கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளுக்கு அதிகளவு வெளிநாட்டு உதவி கிடைக்கும் என தான் எதிர்பார்த்ததாக கூறினார்.

இருப்பினும் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நல்லிணக்கத்தை ஏற்படுத்த போதிய முயற்சிகளை மேற்கொள்ளாமையினையிட்டு தாம் கவலையடைவதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி: 02-01-2019
சீட்டிழுப்பு இலக்கம்: 905

ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 1 8 0 6 7 3

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி: 2019.01.02
சீட்டிழுப்பு இலக்கம்: 1992

ஆங்கில எழுத்து: I
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 19 49 69 70

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி: 2019-01-02
சீட்டிழுப்பு இலக்கம்: 96

ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 31 50 60 73

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி: 02/01/2019
சீட்டிழுப்பு இலக்கம்: 326

வெற்றி எழுத்து: A
சுப்பர் இலக்கம்: 26
வெற்றி இலக்கங்கள்: 03 20 23 62

தேசிய லொத்தர் சபை

# DCM
## சுன்னாகம்

A/L 2021 வர்த்தகப் பிரிவு } Day Class

ஆரம்பம் : 06.01.2019 3.00pm
பொருளியல் : S.ஜெயக்குமார்
கணக்கீடு : S.தவா
வணிகம் : S.கபில்ராஜ்

தொடர்பு: 077 857 7308

---

கலை | வர்த்தகம் தொழில் நுட்பம்

# NEC

A/L 2021

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

ஆரம்பம்: 06.01.2019

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

---

# Techno World

வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L.2021, 2019 Day Class

புதிய பிரிவு ஆரம்பம்
05.01.2018 சனிக்கிழமை
9.00 am

077 017 5346

---

# PHYSICS

உயர்தர மாணவர்களுக்கான பௌதிகவியல் வகுப்புகள்

ஆரம்பம்: 07.01.2019 மாலை 4.30

ஆசிரியர்: Ramanan
B.Sc (Hons) in physics, M.Sc in physics

Day Class
பிரிவு I - வார நாட்களில் காலை 7.00 - 8.30
பிரிவு II - வார நாட்களில் மாலை 4.30 - 6.00

தொடர்புகளுக்கு: 077 647 0614

Techno World
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

# தொழில்நுட்பப் பிரிவு

DMI JAFFNA

ஜனவரி - 5 காலை - 9

## A/L 2k21

தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்
- S. சசி
- A. தயா
- K. சுதா
- S.S. தயாபரம்

உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்
- K. சுதா
- M. றோய்
- K. கஜதீபன்

பொறியியல் தொழில் நுட்பம்
- A. தயா
- P. கயந்தன்
- S. குமணன்

---

# விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS

---

# DCM யாழ்.நகர்

வேம்படி மகளிர் பாடசாலை அருகாமை

## A/L 2021
வர்த்தகப் பிரிவு

ஆரம்பம்

06.01.2019 (ஞாயிறு)
9.00 am

பொருளியல் S.ஜெயக்குமார்
கணக்கீடு S.தவா
வணிகக்கல்வி N.S.கபில்

தொ.இல. 077 011 9434

---

# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

---

**முயற்...**

உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட வட மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா, ஒற்றையாட்சியின் கீழ் கடந்த காலங்களிலே தீர்வை பெற்றுக் கொண்டிருக்கலாம் என குறிப்பிட்டார்.(ம)

**முல்லை...**

தொழிற்சங்கம் அறிவித்திருந்தமை தெரிந்ததே. (ம)

---

# கணக்கீடு பிரத்தியேக வகுப்பு

இடம்: இல.17, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்.

A/L 2021 Day Class

ஆரம்பம்: 06.01.2019 ஞாயிறு 2pm
ஆரம்பம்: 07.01.2019 திங்கள் 6am

S.தவா

தனைய பிரிவு வகுப்புகளும் நடைபெறுகின்றன

0772395858

---

# விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

## A/L தொழினுட்பப் பிரிவு

வெற்றிகள் தொடர....

கல்வியாண்டு 2021, 2019 DAY

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
05.01.2019 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு

077 248 7774

---

# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

கடந்த 06.12.2018 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்



## அமரர் ஆறுமுகம் பவளராசா

(மயிலிட்டியைச் சேர்ந்தவரும் முன்னாள் லங்கா சீமெந்து KKS ஊழியரும்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை மறுதினம் 05.01.2019 சனிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 5 மணியளவில் நடைபெற்று மதியம் 12 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்அழைப்பினை ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

திருவாதணி,
இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

0770553856, 0772380234

---



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்



# ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623

---

# ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

## af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

021 222 8093 61.கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

---

கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்

DMI JAFFNA

ஜனவரி-5 காலை-9

DAY CLASS

---

கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்

DMI JAFFNA

ஜனவரி-5 காலை-8

A/L 2k21

---

# இலத்திரனியல்
# ELECTRONICS

- இலத்திரனியல், ஓட்ட மின்னியல் வினாவிடை பயிற்சி. A/L பொறியியல் தொழில்நுட்பத்திற்கு.
- இலத்திரனியலை விரும்பும் எத்தரப்பினரும் 100% செயல்முறை ஊடாக கற்கலாம்.
- பிரத்தியேக வகுப்பாதலால் முன்பதிவு செய்க.

தொடர்பு: J.J.MICHAEL
66, Chapel Street,
Jaffna.
Tel: 077 955 4276


ஆரம்பம் : 05.01.2019

---

# Dr.eam of Studying MBBS / MD

China | Belarus | Latvia | Malaysia

Admission open for 2019 intake




Dalian Medical University - China
Zhengzhou University - China
Grodno State Medical University- Belarus
Riga Stradins University - Latvia
MAHSA University - Malaysia

Duration: 6 years Medium-English

Colombo : 076 7013060
107, B-1/1 Galle Road, Colombo 06
Jaffna : 077 3013060
77, Clock Tower Road, Jaffna

ICS Study Medicine Abroad

---

A/L 2021 கணக்கீடு

Mr. BALAKAJEN
(யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்)

KBK CENTRE

| கொழும்புத்துறை | சுதுமலை |
|---|---|
| Sat & sun 4-5pm | Tue &Fri 5-6pm |
| ஆரம்பம் 05.01.2019 சனி மாலை 4 மணி | ஆரம்பம் 04.01.2019 வெள்ளி மாலை 5 மணி |

075 077 5660

---

# A/L 2021
ஊடககற்கை Media Studies

திரு.என்.கஜிதரன்
- B.A (Hons) Spl in media studies
- M.A (mass communication & Journalisam)

கலை, தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்குரியது

- பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
- பொருளியற் கல்லூரி கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
- BARATHY - சித்தன்கேணி

ஆரம்பம்: ஜனவரி 06 காலை 8 am
A/L Day திங்கள் 2 pm (யாழ். பொருளியற் கல்லூரி)

விரும்பிய இடங்களில் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.